கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(03.11.2019 - 03 கார்த்திகை, 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 219, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# இறை ஊழியர் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையை புனிதர் நிலைக்கு உயர்த்த

## வலுவான புதுமைகள் தேவை!



நீர்கொழும்பு புனித மரியாள் ஆலயத்தில் இடம்பெற்ற தேமஸ் கர்தினால் குரே ஆண்டகையின் 31ம் ஆண்டு நினைவு திருப்பலியின் போதே அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கூறினார். இறை ஊழியர் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகையை பாக்கியமான நிலைக்கும் புனிதத் தன்மைக்கும் உயர்த்த, கொழும்பு உயர் மறைமாவட்டத்தினால்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## தமிழ் கத்தோலிக்க ஆசிரியர் தினம் – 2019



கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ்க் கத்தோலிக்க ஆசிரியர் தினம் நான்காவது தடவையாக 05.10.2019 அன்று கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலய பிரதான மண்டபத்திலே விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலை 09.00 மணியளவில் பிரதம விருந்தினரான திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு. கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும், கௌரவ விருந்தினரான கொழும்பு வலயக் கல்விப் பணிமனையின் பாடசாலைகள் நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாள் திருமதி S. பிரபா அம்மையாரும்,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இறைவனின் விருப்பப்படி வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வாகும்.



கிறிஸ்தவ வாழ்வு ஞாயிறு திருப்பலியில் பங்கு கொள்வது மாத்திரமல்ல...! கடந்த ஞாயிறு கம்பஹா இந்திகொல்ல புனித யூதா ததேயு திருத்தல திருவிழா திருப்பலி மறையுரையின் போது அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கூறினார்கள். ஞாயிறு திருப்பலி, கடன் திருநாட்களை...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



உலகளாவிய ரீதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாக திகழும் மடு திருத்தலத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் உறுதிப்பத்திரத்தை ஜனாதிபதி அவர்கள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் 29.10.2019 அன்று கையளித்தார்

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பான இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் அறிக்கை

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறது. ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பது குறித்து மக்கள் புத்திசாதூரியமாகவும் தைரியமாகவும் செயற்படுவதுடன் தெரிவு செய்யும் வேட்பாளர் நாட்டின் சுதந்திரத்தைத் பாதுகாத்து மக்கள் அனைவருடனும் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றக்கூடிய ஒருமைப்பாடு மிக்கவராகவும் இருக்க வேண்டும். மக்களின் உரிமைகள் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்கும் வேட்பாளரையே ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஈஸ்ரர் ஞாயிறு அன்று எமது அப்பாவி மக்கள் அனுபவித்த மிருகத்தனமான தாக்குதலை கருத்தில் கொண்டு எமது நாட்டில் மதவாதம் மற்றும் இனவாதம் ஒழிக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் ஈடுபட்டு உழைக்கவும், நம் நாட்டில் உள்ள அனைத்து இன, மத மக்களிடையே சகவாழ்வு ஏற்படவும் வழிசமைக்குமாறு அனைத்து தலைவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்கால ஜனாதிபதியும் அரசாங்கமும் சிறந்த தேசிய கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மத சுதந்திரம், தேசிய பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் மற்றும் இயற்கை வளங்களின் பொறுப்புமிகு மேலாண்மை ஆகியவற்றை மையப்படுத்திய கொள்கைகளை வகுத்து அடுத்தடுத்த தலைமுறையினருக்குச் சேவை செய்வதற்கும், நாட்டின் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் வழிவகுக்க வேண்டும்.

எதிர்கால அரசியல் தலைவர்கள் மக்களின் நிலை அல்லது அவர்தம் பதவி நிலைகளைப் பொருட்படுத்தாமல் சட்டத்தின் முன் சமமாக இருக்கும் வகையில் அனைத்துக் குடிமக்களுக்கும் அமைதியை உறுதி செய்யுமாறு நாங்கள் மனதார கேட்டுக்கொள்கிறோம்.

நாட்டின் வளர்ச்சியில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு ஊழல் தான் அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இதன் விளைவாக மக்கள் இன்று துன்பத்தையும் வறுமையையுமே அனுபவித்து வருகின்றனர். ஆகவே எதிர்கால ஜனாதிபதியும், தலைவர்களும் கடும் நடவடிக்கைகளின் மூலம் ஊழல்களை ஒழிப்பதை தமது பிரதான கடமையாகக் கொள்ளவேண்டும்.

அனைத்துக் குடிமக்களும் தமது உரிமைகள் கடமைகள் மட்டில் கவனம் செலுத்தி, பொதுநலனை மேலும் மேம்படுத்துவதற்காக தங்கள் வாக்குகளைச் சுதந்திரமாகப் பயன்படுத்த வேண்டியது அவர் தம் பொறுப்புமிகு கடமை என்று திருஅவை கற்பிக்கின்றது. இந்நிலையில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஜனநாயக உரிமையுடன் கூடிய தமது மகத்துவமான வாக்கினை அளிக்க வேண்டுமென அனைத்துக் கத்தோலிக்கர்களுக்கும், குடிமக்களுக்கும் அறிவுறுத்துகின்றது.

தேர்தல்களுக்கு முன்னதாக, தேர்தல் சட்டங்களை மற்றும் ஆரோக்கியமற்ற போக்குகளை நாங்கள் அவதானிக்கின்றோம். எனவே தேர்தல் சட்டங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்கவும், தேர்தலைக் கருத்திற்கொண்டு மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்க சுதந்திரமான, நியாயமான தேர்தலை உறுதி செய்யவும், தேர்தல்களில் பங்கேற்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள், அவர்களின் ஆதரவாளர்கள், சமூக ஊடகங்கள் மற்றும் தேர்தலை நடாத்தும் பொறுப்புமிகு அதிகாரிகளிடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஜனாதிபதியும் அரசாங்கமும் நம் நாட்டையும் மக்களையும் உண்மையான முன்னேற்றத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும் என்பது எங்கள் பிரார்த்தனையாகும்.

| | |
|---|---|
| மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS | மேதகு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை |
| தலைவர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை | உபதலைவர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை |
| பதுளை மறைமாவட்ட ஆயர் | யாழ் மறைமாவட்ட ஆயர் |

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**என் கடவுளே, என் அரசே உம் பெயரை என்றும் போற்றுவேன் (தி.பா 145)**

# தூய வேளாங்கண்ணி அன்னையின் ஆண்டுவிழா

**இரத்தினபுரி – எஹலியகொட தோட்டம்.**



அன்னையின் ஆண்டு விழாவிற்காக இந்திய நாட்டிலிருந்து இலங்கை நாட்டு இறைமக்களுக்காக பணிபுரிய வந்திருக்கும் அருட்பணியாளர் சவேரியார் அடிகளார் (கார்மேல் சபை) விசேடமாக அழைக்கப்பட்டிருந்தார். கடந்த 16ம் திகதி அடிகளாரால் கொடியேற்-றப்பட்டு, தொடர்ந்து நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 19.10.2019 அன்று மாலை ஆராதனையும், 20ந் திகதி திருவிழா திருப்பலியில் பங்குத்தந்தை மில்டன் விக்கிரமசிங்க அடிகளாரும், இரத்தினபுரி மறைப்பணி நிலைய இயக்குனர் அருட்பணி. ஜசட் அமில பர்னாந்து அடிகளாரும், கரிட்டாஸ் - செத்மினி நிலைய இயக்குனர் அருட்பணியாளர் சஞ்சீவ பீரிஸ் அடிகளாரும் கலந்து கொண்டு ஆண்டு விழாவை சிறப்பித்தனர்.

தூய வேளாங்கண்ணி அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

**தகவல் மற்றும் படங்கள் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**



நாயக்கந்தை புனித காணிக்கை அன்னை ஆலயத்தில் சிங்கள, தமிழ் மாணவர்களுக்கான முதல் நன்மை சிறப்புத் திருப்பலி 2019.09.28ம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரின் தலைமையில், உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. கிஹான் அடிகளாரும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணி. மேரியஸ் அடிகளாரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

பங்குத்தந்தையினதும் உதவிப் பங்குத்தந்தையினதும் பூரண ஒத்துழைப்பு, வழிகாட்டலின் கீழ், சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்டு மாணவர்கள் இத்திருவருட்சாதனத்தை மகிழ்வுடன் பெற்றனர். இப்படத்தில் பங்கின் தமிழ் மக்கள் மீது மிகவும் கரிசனை காட்டும் பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரையும் பயிற்றுவித்த ஆசிரியையும் முதல் நன்மை பெற்ற மாணவர்களான யோசுவா, ஐசேக், பெனோ ஆகியோரை படத்தில் காணலாம்.

**தகவல் : திருமதி. கோமதி ஜோன்.**

# கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு 2019 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு

இத்தேர்வு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறும். கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள கத்தோலிக்க மறைப்பாடசாலைகளுக்கு விண்ணப்பப்படிவங்களும், அறிவுரைகளும் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் கிடைத்திராத அல்லது போதுமானதாக இல்லாத மறைப்பாடசாலை அதிகாரிகள் கீழ்காணும் முகவரிக்கு அலுவலக நேரத்தில் வருகை தந்து அல்லது தமது வேண்டுக்கோளை முன்வைப்பதற்காக விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டு தபால், தொலைநகல், அல்லது வலைத்தளத்தின் மூலம் அல்லது விண்ணப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தை திணைக்கள வலைத்தளத்தின் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

இத்தேர்வுக்கு வெளி விண்ணப்பதாரர்கள் தோற்றுவதற்கு அனுமதி இல்லை. ஆயினும் பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியுடைய விண்ணப்பதாரர் தமக்கு அண்மையிலான கத்தோலிக்க மறைப்பாடசாலை மூலம் பரீட்சைக் கட்டணத்தை தபால் / உப தபால் அலுவலகத்தில் அல்லது வட்டார செயலகத்தில் அல்லது பிராந்திய செயலகத்தில் செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

சரியாக நிரப்பிய விண்ணப்பப் படிவத்தை 2019-11-15க்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்வதற்கு / மீண்டும் அனுப்புவதற்கான முகவரி :**

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பெலவத்தை, பத்தரமுள்ள.



## வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயம். குழந்தை இயேசு நவநாட்களில் 1500வது நவநாள்

புதுமை செய்யும் குழந்தை இயேசுவின் நவநாட்களின் 1500வது நவநாளை சிறப்பிக்கும் முகமாக கடந்த மாதம் 17ம் திகதி புதிதாக வடிவமைத்த குழந்தை இயேசுவின் திருச்சுரூபம் திருத்தந்தையின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க பிரதிநிதி கலாநிதி அதிமேதகு. வன் டொட் அவர்களால் ஆசீர்வதித்து ஆலயத்தில் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ளது.

**தகவல் மற்றும் படங்கள் : S.B. டேவிட்**

# புனித சதா சகாய அன்னை ஆண்டு விழா

## கரபிஞ்ச தோட்டம் – இரத்தினபுரி.

கடந்த 09.10.2019 அன்று அரசுப்பணியாளர் பர்டினன் (செபமாலை தாசர் சபை) உதவிபங்குத்தந்தை அருட்தந்தை. ஜோய் அந்தோணிமுத்து அடிகளாரும் இணைந்து அன்னையின் கொடியேற்றப்பட்டு தொடர்ந்து நவநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை ஆராதனையன்று பங்குதந்தை என்ஸ்லி சுரங்க பர்னாந்து அடிகளார் கலந்துகொண்டு சிறப்பித்தார். திருநாள் திருப்பலியை அருட்பணி பர்டினன் அடிகளாரும், அருட்தந்தை ஜோய் அடிகளாரும் ஒப்புக்கொடுத்தனர்.

**தகவல் : மேரி இருதயநாதன், பேராலயம் இரத்தினபுரி.**



# ஆலய திறப்பு விழா




மதுகம, குயில்கா தோட்டம் புனித சூசையப்பர் சிற்றாலய திறப்பு விழா, கொழும்பு துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையின் தலைமையில் கார்த்திகை மாதம் 23ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வெகுவிமரிசையாக இடம்பெறவுள்ளது. உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : அருட்பணி. ஒனாசிஸ் பர்னாந்து**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

# மாம்புரி புனித செபமாலை மாதாவின் 125வது யூபிலி விழாவும் அதன் வரலாறும்.

புத்தளம் மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள மாம்புரி எனும் அழகிய கிராமமானது பெருங்கடல் சிறுகடல் சூழப்பட்டாலும் நம்பி விதை விதைத்தால் நற்பலன் தரும் வளமான பூமியாகும். கடற்தொழில் புரியும் இருசாராரும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். அன்று யோசேவ்வாஸ் அடிகளார் இலங்கைக்கு இறைபணி ஆற்ற வந்தபோது இப்புத்தள மண்ணிலும் கால்பதித்து தன் வாழ்வாலும், இறைவார்த்தையாலும் எம் முன்னோர்களின் உள்ளத்தில் எழுந்த இறை விசுவாசத்தை விதைத்துச் சென்றதினால் அவர்களும் அவ்விசுவாசத்தில் ஊன்றி நின்றனர். அவ்விசுவாசத்தின் வெளிப்பாடாக 125 ஆண்டுகள் கடந்தாலும் எம்மையும் அந்த விசுவாசத்தில் வாழ்வைத்த இறைவனுக்கும், மாதாவுக்கும் நன்றிக்கடனாக யூபிலி விழாவைக் கொண்டாட எம் பங்கு மக்கள் முன்வந்தனர்.

இவ்வாலயம் 125 யூபிலியை கொண்டாடும் இவ்வேளையில் மாதாவின் ஆலயம் தோற்றம் பெற்ற வரலாற்றினை உங்களோடு பகிர விரும்புகின்றேன். மாம்புரி என்று இன்று அழைக்கப்படும் இக்கிராமம் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டு அழகும் அமைதியும் நிறைந்ததாகவும், மான்கள் நிறைய இக்காடுகளில் வசித்தமையால் மாண்புரி என அழைக்கப்பட்டதாம். பெருங்கடலை அண்மித்த பகுதியானாலும் விவசாயம் செய்யக்கூடிய இடமாகவும் இருந்தது. எங்கள் மூதாதையரான பேதுரு...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
03 கார்த்திகை, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# நாம் அனைவரும் புனித வாழ்வு வாழவே அழைக்கப்பட்டுள்ளோம்.

திருச்சபையானது கார்த்திகை மாதத்தில் சகல புனிதர்களின் பெருவிழாவையும், சகல ஆத்துமாக்களின் திருநாளையும் கொண்டாடி வருகிறது. ஏன் இந்தப் புனிதர்கள் நினைவு கூரப்பட வேண்டும்? இவர்கள் இன்னும் இறைவனோடு வாழ்ந்து கொண்டிருப்பதால். ஆம், புனிதர்கள் இவ்வுலகில் இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்ந்து சாட்சியம் பகர்ந்து விண்ணுலகை உரிமையாக்கிக் கொண்டவர்கள் நம்மில் பலர், குருக்கள் துறவியர் மட்டும்தான் புனிதராகும் தகுதியுடையவர்கள் என்பர். இல்லை, இவ்வுலகில் பிறப்போர் புனிதர்களாகவே பிறப்பதில்லை. கிறிஸ்துவின் மதிப்பீடுகளில் வளர்ந்து, கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை சாட்சியமாக்கி விண்ணில் இடம் பிடித்துக்கொண்டவர்கள்.

திருமுழுக்கின் வழியாக இறைவனின் பிள்ளைகளான நாம் அனைவருமே புனித வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம். ஆனால் அவ்வாழ்வை உரிமையாக்கிக் கொள்கின்றோமா? என்பது தான் நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி. மரணத்திற்குப் பிறகு மனிதனின் நிலை என்ன? தீமை செய்தவர்கள் நரகத்திற்கும், நன்மை செய்தவர்கள் சொர்க்கத்திற்கும் செல்வார்கள் என்பது பொதுவான கருத்து. இந்த சொர்க்கம் நகரம் பற்றி பல்வேறு கருத்துக்கள் உண்டு. அதாவது சொர்க்கம் நரகம் இங்குதான் இருக்கிறது. நல்லது செய்தவர்கள் இன்பத்தையும், கெட்டது செய்தவர்கள் துன்பதையும், நோய் நொடிகளையும் அனுபவிப்பார்கள். இந்த இன்பமும், நோய் நொடியும் தான் சொர்க்கம் நரகம் எனக் கூறுவர். எது எப்படியாயினும் நாம் நன்மை செய்து சொர்க்கத்தை சொந்தமாக்குவதா? இல்லை, தீமை செய்து நரகத்தை நமதாக்குவதா? இது தான் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது.

சவம் எடுத்துச் செல்லப்படும் போது, அதைப் பார்த்து பத்துப்பேர் ஐயோ புண்ணியவான் போய் விட்டாரே என்று சொன்னால் அது சொர்க்கத்தின் படிக்கட்டுக்கள் ஆகும். அதே வேளையில் அதே பத்துப்பேர் சண்டாளன் போய்விட்டான் என்றால் அது நரகத்தின் படிக்கட்டுக்களாக இருக்கும். அந்த நல்ல பெயரையே மனிதன் தேட வேண்டும். இவ்வுலகில் நம்மோடு வாழ்ந்து மரித்தது எமது உறவுகள் பயணித்த பாதையே நாம் செல்லவிருக்கும் பாதை என்பதை மறந்து விடக் கூடாது.

இறையாசிருடன்
ஆசிரியர்

# எதற்காக இந்த நாள்?








நம் அனைவருக்கும் கார்த்திகை இரண்டு என்றாலே நினைவுக்கு வருவது கல்லறைத் திருநாள் அல்லது அனைத்து ஆன்மாக்கள் தினம். ஒவ்வோராண்டும் கார்த்திகை மாதம் 2ம் திகதியை அனைத்து ஆன்மாக்கள் தினமாக தாய் திருஅவை சிறப்பிக்கின்றது. இதுவரை கண்டுகொள்ளப்படாத கல்லறைகள் சுத்தம் செய்யப்பட்டு மெழுகுவர்த்தியேற்றி பூமாலைகளால் அழகாக அலங்கரிக்கப்படுவது வழக்கம். எதற்காக இந்த நாள்? ஏன் இந்த நாளில் நாம் இவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும் என பல கேள்விகள் நம் உள்ளத்தில் எழலாம். இந்த கேள்விக்கெல்லாம் பதிலளிக்கும் விதமாக நம் தாய் திருஅவை இந்நாளை அனைத்து ஆன்மாக்கள் தினமாக சிறப்பிக்கின்றது.

நம் மனித வாழ்வில் மரணம் என்பது ஒரு முடிவல்ல. மாறாக அது ஒரு இளைப்பாறுதல் மட்டுமே. விவிலியத்தில் மரித்த இலாசர் (யோவா 11:11) மற்றும் யாயீர் மகளை (மாற் 5:39) உயிர்ப்பித்த பொழுது அவர்கள் உறங்குகிறார்கள் என்று கூறித்தான் தூக்கத்திலிருந்து ஒருவரை எழுப்புவதுபோல் இலாசரையும் அச்சிறுமியையும் ஆண்டவர் உயிரோடு எழுப்பினார்.

கருவறையும் கல்லறையும் கடவுளால் படைக்கப்பட்டவைதான். இரண்டும் ஒன்றுக்கொன்று இணையானது, தொடர்புடையது. இரண்டுமே இருள் படர்ந்துதான் இருக்கும், ஆனால் அவை அத்தோடு முடிவதில்லை. மாறாக கருவறையிலிருந்து வெளிவரும்போது புதுவாழ்வு பிறக்கின்றது. கல்லறையிலிருந்து வெளிவரும்போது நிலைவாழ்வு உரிமைப்போறாகக் கிடைக்கின்றது. இரண்டுமே வாழ்வை நமக்குத் தருகின்றன. இந்த ஒரு உன்னதமான நிலையை நாம் ஒவ்வொருவருமே இறைவன் இயேசுவின் இவ்வுலக வாழ்விலிருந்தும், அவர் செய்த புதுமைகளிலிருந்தும் கண்டுணர முடியும். இதற்கு முன்னடையாளமாக அமைவதுதான். அதாவது கடவுளால் இறந்தவர் உயிர்பெற்றெழுவர் என்பதை உணர்த்தும் விதமாக வருவதுதான். விவிலியத்தில் நாம் வாசிக்கும் பன்னிரண்டு வயது சிறுமி உயிர்பெறும் நிகழ்வும் (மாற் 5:41). மரித்த இலாசர் உயர்பெறும் நிகழ்வும் (யோவா 11:43) ஆகும். இந்நிகழ்ச்சிகள் நமது வாழ்வில் மரணம் ஒரு முடிவல்ல, நமது வாழ்வு மரணத்தோடு நின்றுவிடுவதல்ல, மாறாக மரணத்தையும் தாண்டி நிலைவாழ்வை பெறுவதாகும் என்பதைக் குறிக்கிறது. எனவே இந்த ஆன்மாக்கள் தினமானது நம் ஒவ்வொருவரையும் புது நிறைவாழ்வை நோக்கிய பாதையில் பயணிக்க அழைப்பு விடுக்கின்றது. எனவே கல்லறைகள் வாழ்வின் முடிவிடங்கள் அல்ல. முடிவில்லா வாழ்வின் பிறப்பிடங்கள்.

இறந்து போன ஆன்மாக்களுக்காகவும், உத்தரிக்கிற ஸ்தலத்தில் துன்பப்படும் ஆன்மாக்களுக்காகவும், யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் இந்த சிறப்பு தினத்தில் மன்றாடுவோம். t t t t t t

# உண்மை உறைக்கும்



# புனிதத்தின் பாதையில் மனிதம்!

நவம்பர் 01 ஆம் திகதி







## “தூயவராய் இருங்கள்! ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!!”

**“தூயவராய் இருங்கள்! ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்!!”** என்பதை உணர்ந்து அவரின் திட்டத்திற்கேற்ப வாழும்போதும், வாழ முயற்சி செய்யும்போதும், நாமும் தூயவராகிறோம். நடமாடும் புனிதர்களாகின்றோம். அதனால் தான் திரு அவை தொடக்க கால கிறிஸ்தவர்களை **ஹாகியோஸ்** என அழைத்தது. ஹாகியோஸ் என்றால் கிரேக்க மொழயில் புனிதர் என்று பொருள்

ஆம் நவம்பர் மாதம் முதலாம் திகதி அனைத்து புனிதர்களையும் நினைவு கூறுகின்றோம். அவர்களிடம் பரிந்து பேசுமாறு மன்றாடுகின்றோம்.

**திரு அவையின் புனிதர்கள்**

**நம் வாழ்க்கை என்னும் பயணத்தில் பலமுறை வழி தெரியாமல் தவிக்கும்போது நம் பயணத்திற்குப் பாதை காட்டுபவர்கள் நம் புனிதர்கள்.** எப்படியும் வாழலாம் என நினைக்கும் நம்மில் பலருக்கும், இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழும் முறையை வாழ்ந்து காட்டியவர்கள் புனிதர்கள். பல நேரங்களில் நம்முடைய ஆன்மீக வழிபாடுகளில் அச்சாணியாக இருப்பவர்களும் அவர்கள் தான். இவர்கள் திரு அவையில் முக்கிய இடத்தை வகிக்கின்றார்கள். புனிதர்களின் பாதை கடினமாய், கரடுமுரடாய், முற்களாய் தான் இருந்திருக்கிறது. புனித நிலை கிறிஸ்தவர்களாகிய நமக்கு எப்படி? சுலபமா? கடினமா? சிந்தித்தால்.... எப்போது நம் வாழ்க்கை மாபெரும் புனிதரான இயேசு என்பவரோடு பயணம் செய்யத் தொடங்குகிறதோ, அன்றுதான் அந்த புனித நிலை நமக்கு ஓர் சுலபமான வாழ்க்கையாக மாறும்.

**புனிதர்கள் அன்று இயேசுவோடு நடந்தார்கள். அவரோடு இணைந்தார்கள். அவரோடு பிணைந்தார்கள். அவரைப் பற்றி மட்டுமே சிந்தித்தார்கள். தங்களது எண்ணங்களிலும். ஏக்கங்களிலும். இயேசுவையும். அவரது வார்த்தைகளையும். சுமந்தார்கள். இன்று திருஅவையில் புனிதர்களாக இருக்கின்றனர்.**

ஆகவே, நாமும் புனிதராகலாமா? துறவிகளும், குருக்களும் திருத்தந்தையர்களும், மட்டும்தானா புனிதர்கள் ஆக முடியும்? 2ம் வத்திக்கான் சங்கம், நமக்கு ஓர் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறது. எல்லோரும் புனிதர்களாகலாம் என்ற கருத்தை பகிரங்கமாக அறிவித்தது.

சாதாரண மக்களும் சமுதாயத்தில் அடித்தட்டு மக்களாக மாற்றப்பட்டவர்களும், வாழ்க்கையில் பல வழிகளில் ஒதுக்கப்பட்டவர்களும் கூட, ஏன் நாமும் நினைத்தால் புனித நிலையை வாழ முடியும்... எப்படி?

இன்று புனித நிலைக்குப் புதிய பொருள் காணவேண்டியுள்ளது. இயேசுவின் மாலைப்பொழிவு அதிலும் குறிப்பாக, பேறுகள் புனித நிலைக்கு அளவீடாக அமைகிறது.

1. **ஏழையரின் உள்ளத்தோர்:** நான், குடும்பம், செல்வம், பதவி புகழ் ஆகிய மாற்றுகளைத் தவிர்த்து, இறைவனை மட்டும் கதியாகக் கொள்வோம்.
2. **துயருறுவோர்** : பிறர் துன்பங்களைப் பகிர்ந்து நம்பிக்கை அளிப்போம்
3. **கனிவுடையோர் :** பிறருக்கு இரக்கம் காட்டுவோம்.
4. **நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர்:** நீதி ஆள வேண்டும் என்ற சிந்தனையை உள்ளத்தில் இருத்திக்கொள்வோம்.
5. **இரக்கம் உடையோர் :** வரலாற்றில் சமநிலை மறுக்கப்பட்டு தேவையில் உழல்வோருக்கு இரக்கச் செயல்கள் வழி மாண்பினைப் பெற வழிகாட்டுவோம்.
6. **தூய்மையுடையோர் :** பிறவுபடா உள்ளம் உடையவர்களாய் வாழ்வில் தூய்மையைக் காப்போம்.
7. **அமைதி ஏற்படுத்துவோர்:** நீதியின் அடிப்படையில் அமைதி நிலைபெற உழைப்போம்.
8. **நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் :** பிறரது உரிமைகளை நிலைநாட்டும்போது ஏற்படும் எதிர்ப்புகளை எதிர்கொள்வோம்.

இப்பேறுகளை நமது வாழ்வில் வாழும்போது, நாம் வாழவேண்டிய முறைப்படி வாழ்கின்றவராவோம். புனித நிலையினை உரிமையாக்கிக்கொள்வோம்.

**இயேசுவில் நடப்போம்**
**தினம் ஒரு வித் செய்வோம்!**
**புனிதனாக வாழ முயற்சி செய்வோம்!**
**என மனவுறுதிக் கொண்டு கிறிஸ்தவ புனித**
**வாழ்வைக் கொண்டு மகிழ்ந்து புனிதப் பாதையில்**
**மனிதம் மலர்ந்து புனிதமாய் புறப்படுவோம், எம் தாய்**
**திரு அவையை வளர்த்திடுவோம்! காத்திடுவோம்..!!**

# உன்னையே நீ அறிவாய் !



பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கிரேக்க ஞானி சோக்கிரடீஸ் உன்னையே நீ அறிவாய் என்னும் தத்துவத்தைக் கூறினார்.

காலத்திற்கு காலம் இத்தத்துவம் உளவியல் வல்லுனர்களால் வலியுறுத்தப்பட்டுக் கொண்டு வந்தது. இத்தத்துவம்தான் எல்லா வெற்றி வாழ்வுக்கும் அடித்தளமாய் உள்ளது. எம்மில் எத்தனை பேர் எம்மையே நாம் நன்கு அறிந்துள்ளோம்? சாதாரண மனிதன், தான் வைத்திருக்கும் வாகனங்களைப் பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளான். அதன் பின்னரே தன்னைப் பற்றி அறிய முற்படுகிறான். எமது வளமான வாழ்விற்கு எம்மிடத்திலுள்ள வளங்கள் எவை என்று அறிந்திருப்பது மிகவும் அவசியம். இதற்கு பின்வரும் வினாக்களை எம்மிடம் நாமே கேட்டுப் பார்ப்போம்.

1. நான் வாழ்வதற்குக் காரணம் என்ன? ஏதோ நான் இருக்கும் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றேனா? அல்லது எனது வாழ்விற்கு ஒரு உன்னதமான குறிக்கோள் உண்டா? எனது நாளாந்த வாழ்வை எவ்விதமான திருப்தியோ, மகிழ்ச்சியோ இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றேனா?

2. என்னுடைய வாழ்விலே நான் எதைச் சாதிக்க விரும்புகின்றேன்? ஏதோ நாளாந்த செயற்பாடுகளோடு திருப்தியாக இருக்க விரும்புகின்றேனா? அல்லது நான் வாழும் சமூகத்திற்கு என்னால் முடியுமான பங்களிப்பைச் செய்ய முயற்சிக்கின்றேனா? நான் எப்படிப்பட்ட பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றேன்? **“நாடு உனக்கு எதை செய்தது என்று கேட்பதை விட்டு நாட்டுக்கு நீ எதைச் செய்தாய்? என்று கேள்”** என்று கூறினார் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எவ். கென்னடி. இவ்வாறான நோக்கம் இருப்பதற்கு எம்மையே நாம் நன்கு அறிந்திருப்பது அவசியம்.

எம்மை அறிந்திருப்பது என்பது மட்டுமல்ல எமது பலங்கள், பலவீனங்களோடு எம்மை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது ஆற்றல்கள், திறமைகள் எம்மால் சாதிக்கக் கூடியவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது குறைகள், பலவீனங்களையும் ஏற்றுக்கொள்வது அவசியம். அவை எம்மிடம் இல்லை என்று எம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. இத்தகைய சுய ஆய்வுத் தேடல் எமது வாழ்வில் புதியன பல காண வழி வகுக்கும்!

3. எனக்கென்று ஒரு திட்டம், நிகழ்ச்சி நிரல் உண்டா? எனது நோக்கம், இலட்சியத்தை அடைய என்ன வழிகளை வகுத்துள்ளேன்? இந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறுவதில் நான் வெற்றி கண்டுள்ளேனா? அப்படி முன்னேற்றத்தை நான் காணாது போனால் அதற்கு காரணம் என்ன? எனது நோக்கத்தில் நான் எப்பொழுதும் தெளிவாக இருக்கின்றேனா?

4. எனது இலட்சியத்தை அடைவதற்கு என்னிடமுள்ள வளங்கள் என்ன? எனது ஆளுமை என்னிடம் உண்டு. நான் தனித்துவமானவன் - இவ்வுலகில் என்னைப் போல் வேறொருவர் இல்லை. அப்படியென்றால் **நான் செய்யக்கூடிய பங்களிப்பை இன்னொருவர் செய்ய முடியாது - நான் அப்பங்களிப்பை செய்தே ஆக வேண்டும்.**


எப்படிப்பட்ட ஆற்றல்கள் என்னிடமுண்டு? அப்படிப்பட்ட ஆற்றல்களை நான் தட்டிக்கழிக்கின்றேனா? அல்லது அவற்றை மிகைப்படுத்திக் கூறுகின்றேனா? இப்படி செய்வதால் நான் என்னையே ஏமாற்றிக் கொள்கிறேன். உமது இலட்சியத்தை அடைவதற்கு உம்மிடமுள்ள வளங்கள் எவை என்று எழுதவும்.

5. மற்றவர்களைப் பற்றி எனது அபிப்பிராயம் என்ன? மற்றவர்களோடு எனக்கு உள்ள உறவு திருப்தியாய் உள்ளதா? அப்படி இல்லையென்றால் அப்படிப்பட்ட நிலைக்கு நான் எவ்வளவு காரணனாக இருக்கின்றேன்? என்னைப் பற்றி மற்றவர்கள் அக்கறை கொள்ள வேண்டுமென்று நான் எதிர்பார்ப்பது போல நான் மற்றவர்கள் மட்டில் அக்கறை கொண்டுள்ளேனா? மற்றவர்களிடம் போவதற்கு, அவர்கள் விருப்பத்தோடு செய்வதை நான் விருப்பத்தோடு தேடிச் செல்கிறேனா?

6. நான் என் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கின்றேனா? நான் மகிழ்ச்சியாக இல்லை என்றால் அல்லது பயத்தோடு வாழ்ந்தால் அவற்றிற்கு காரணம் என்ன? என் மட்டில் எப்பொழுதும் நான் நேர்மையாக இருப்பது அவசியம். பலர் பலவிதமான திருப்தியீனங்கள் மனவுடைவுகளுக்கான காரணங்களைக் கண்டு அவற்றிற்கு தீர்வு காண விரும்புவதில்லை. உமது திருப்தியீனங்கள், மனவுடைவுகள் எவை? அவற்றிற்கான காரணங்கள் என்ன? என்று எழுதவும்.

எம்மை நாமாக ஏற்றுக்கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும். நீங்கள் சாதிக்க கூடியவைகள், அதற்காக உங்களிடம் இருக்கும் வளங்களை அலட்சியம் செய்ய வேண்டாம். உங்களிடம் இருக்கும் குறைபாடுகளையும், ஏற்றுக்கொள்வது அவசியம். அவை உங்கிளிடம் இல்லை என்று பாசாங்கு செய்ய வேண்டாம். இப்படிப்பட்ட சுய ஆய்வுக்கான தேடல் உங்களில் ஒரு புதிய நிலையை உருவாக்க உதவி செய்யும்.

**“நாடு உனக்கு எதை செய்தது என்று கேட்பதை விட்டு நாட்டுக்கு நீ எதைச் செய்தாய்? என்று கேள்”**




அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்



# வாழ்வின் யதார்த்தம் தான் மரணம்

- ❖ மரணம் நிகழாத நாளில்லை - மரணம் நிகழாத வீடில்லை என்றே சொல்ல வேண்டும். இயற்கை மரணம், தற்கொலைகள், பேரிடர் மரணங்கள் போன்ற மரணச் செய்திகளை நாம் அன்றாடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம், பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதனால் தான் மரணம் என்றாலே எல்லோருக்கும் ஒருவித பயம் ஏற்படுகிறது.
- ❖ மரணம் என்பது ஒரு யதார்த்தம். மரணத்தை இறப்பு என்றும், சாவு என்றும், செத்துப்போதல் என்றும் சொல்லுகிறோம்.
- ❖ மரணமா? அது வேண்டாம் என்று எண்ணுவோரே அதிகம். காரணம் மரணம் வாழ்வில் மிகப்பெரும் இழப்பை ஏற்படுத்துகிறது. இருப்பினும் மண்ணில் பிறக்கின்ற அனைத்து உயிரும் இறப்பைச் சந்தித்தே ஆக வேண்டும். மரணம் வேண்டாம் என்று யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. அதிலும் குறிப்பாக மனிதர் ஒவ்வொருவரும் இறப்பை சந்தித்தே ஆக வேண்டும். இது வாழ்வின் எதார்த்தம். மரணத்திற்கு மரணமில்லை. இதை உணர்ந்து கொண்டால் பயமில்லை.

## 1. மரணம் – வலியா? வழியா?

மரணம் ஒருவகை அமைதி. மரணம் வாழ்க்கையின் இறுதிப் பரிசு. ஆயினும் பிடிக்காவிட்டாலும் முடிவுவேளை வந்துவிட்டால் துடிக்காது போகவேண்டும் என்ற எண்ணங்கொண்டோர் பலருண்டு. ஆனால் அழையா விருந்தாளியாய் வருவதுதான் மரணம்.

நாடி நரம்பு தளர்ந்து போகையில், அழையா விருந்தாளியாய் நோய் வந்து சேர்கையில், மனத்திற்கு பிடித்தவர் இல்லாமல் போகையில் வரமாய்த்தான் தெரிகிறது இறப்பு. பலருக்கு மரணமே துன்பங்களில் இருந்து விடுதலை அளிக்கிறது. மரணம் துன்பங்களிலிருந்து மட்டும் அல்ல, பாவங்களில் இருந்தும் விடுதலை அளிக்கிறது. கவிஞர் ஒருவரின் கூற்று, இங்கு நினைவுகூர்வோம்.

மரணம் ஒரு நீண்ட உறக்கம். உறக்கம் ஒரு குறுகிய மரணம். மரணத்திலும் வாழ்வின் முழுமை உண்டு. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே உள்ள காலம் மனிதரின் மண்ணுலக வாழ்வு என்றால், இறப்பிற்கு அப்பாற்பட்ட வாழ்வு ஒன்று உண்டு என்பது இறைநம்பிக்கை கொண்டவர்களுடைய விண்ணுலக வாழ்வு. இதுவே நமது உறுதியான நம்பிக்கை.

புனித பவுலடிகளாரின் கூற்றுபோல, இடர் நிறைந்த இவ்வுலக வாழ்வுக்கு அப்பால் ஒரு பேரின்ப வாழ்விற்காகக் கடவுள் மனிதரைப் படைத்துள்ளார்.

கிறிஸ்தவ விசுவாசம் மனிதரின் மண்ணுலக வாழ்வுக்கு அர்த்தம் தருகின்றது. சாவு என்பது வாழ்வுக்கு முற்றுப்புள்ளி அன்று. மனித வாழ்வை முடிவுக்கு கொணர்வதற்கு அல்ல, மாறாக அதனை என்றென்றும் இறைவனில் நிலைத்திருக்கச் செய்வது. நிறைவு அளிப்பது மரணம் ஆகும். எனவே மரணம் ஒரு வலியல்ல. ஒரு வழி.

## 2. ஆன்மாக்களின் நினைவும் அன்றாட வாழ்வும்

கார்த்திகை 2 கத்தோலிக்கத் திருஅவையின் ஒவ்வொரு இல்லமும் நினைவுகூரும் முக்கிய விழா இந்த இறந்தோர் நினைவுநாள். பொதுவாக திருஅவை ஒவ்வொரு புனிதர்கள் விழாவை அவர்கள் இறந்த அன்றுதான் கொண்டாடுகிறது. புனிதர்கள் மட்டுமல்ல. எல்லா மனிதர்களும் கொண்டாடப்பட வேண்டியவர்களே! என்பதை உணர்ந்து, அவர்கள் இறந்தபின் மனித வாழ்வின் விருப்பு வெறுப்புக்களைக் கடந்த ஒரு நிலையில், அவர்கள் அனைவரையும் ஒரு சேர நினைத்து கொண்டாடும் விழாவே இறந்தோர் நினைவு விழா!

கார்த்திகை மாதம் என்றாலே கல்லறைகள் எல்லாம் அழகுபடுத்தப்படுகின்றன. புதர் அடைந்து கிடக்கின்ற கல்லறைகள் அனைத்தும் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றன. கல்லறைகள் சுத்தம் செய்தல், வெள்ளையடித்தல், இறந்தவர்களுக்கான திருப்பலி நிறைவேற்றல், கல்லறைகளைச் சந்தித்தல், இறந்தோரை நினைத்து அன்னதானம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளாக இந்த கார்த்திகை மாதம் அமைகின்றது.

- ❖ இறந்தவர்கள் என்பவர்கள் மறைந்தும் நம் கண்களை விட்டகலா மலர்கள்.
- ❖ வாழும்பொழுதெல்லாம் நம்மை செப்பனிட்ட செம்மல்கள்
- ❖ இறைபக்தியையும், இறை நம்பிக்கையையும் சொல்லிக் கொடுத்த தெய்வப் பிறவிகள்.
- ❖ பெற்று சீராட்டிய பெருந்தகைகள்
- ❖ உறவாடி மகிழ்ந்த சொந்தங்கள்.
- ❖ அன்பையும் சமாதானத்தையும் நமக்குள் உரமேற்றிய அருந்தவங்கள்
- ❖ மரணித்தும் நமக்காக பரிந்து பேசும் ஊமை விழிகள்
- ❖ நினையா நேரத்தில் மறைந்த நிஜங்கள்.

## 3. இது ஒரு வேறுபட்ட விழா

பொதுவாக விழா என்பது கொண்டாட்டங்கள், வாழ்த்துக்கள் என மகிழ்வின் வெளிப்பாடுகளைக் கொண்டது. ஆனால் இந்த இறந்தோர் நினைவு விழா வேறுபட்ட உணர்வுகளின் திருவிழா.

வேதனை வெறுப்பிலும் கூட இறையருள் தேடும் மாறுபட்ட விழா. அகால மரணமடைந்த அன்பிற்குரியவர்களை எண்ணிக் கண்ணீர் விட்டாலும், கடவுளின் கரத்தில் அவர்கள் இளைப்பாறட்டும் என்னும் பெருமூச்சின் விழா.

வாழ்ந்து முடித்தவர் என எண்ணப்பட்டவரிடம் கடவுளின் வரங்களை வாங்கித் தரும்படி வேண்டிக்கொள்ளும் வேண்டுதலின் விழா. நல்ல மரணம் என எண்ணும்படி, மரித்தவர்களை எண்ணி, இப்படி ஒரு மரணம் நமக்கும் நிகழ வேண்டும் என்னும் ஆவலைத் தூண்டும் அற்புத விழா. மொத்தத்தில் மண்ணக வாழ்வை முடித்துச் சென்றவர்கள் விண்ணக வாழ்வை அடைந்து தனக்கும் அந்த அருளினை அடைந்து தரும்படி மண்ணக வாழ்வை தொடர்வோர் எடுக்கும் ஒரு எதிர்பார்ப்பின் விழா.

## 4. அன்றாட வாழ்வின் தொடர வேண்டிய ஆன்மாக்களின் நினைவு

என்றைக்கோ எண்ணிப்பார்த்து, மலர்கள் தூவி, மணம் பரப்பும் மாலை அணிவித்து, மற்றவர் வியக்க மன்றாடிக் கொள்வது மட்டுமல்ல இத்திருவிழா. அன்றாட வாழ்வுக்கு பாடம் பெற்றுக் கொள்ள கற்றுத்தரும் ஒரு தினசரித் திருவிழா இது.

**தினமும் விழிக்கிறோம்!**
**எப்படியும் விழித்தே ஆக வேண்டும் என்பதால்**
**உறங்கச் செல்கிறோம் எப்படியும்! மீண்டும்**
**விழிக்க வேண்டுமே என்பதால்**

மாறாக நாம் பார்த்த, கேட்ட, உணர்ந்த நம்மவரின் இல்லாமையை தினம் ஒருமுறை நினைத்துப்பார்ப்போம். எப்போதும், எப்படியும், எந்த நொடியும் மரணம் வரலாம் என்பதால், வாழும் நிமிடங்களை அர்த்தமுள்ளதாக்க வேண்டும் எனும் ஆர்வம் நம்மிடையே கொந்தளித்து கிளம்ப, அன்றாட வாழ்வும் கூட அற்புதமாகத் தெரிய ஆரம்பிக்கும். வாழும் வாழ்வுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க, வாழ்ந்து முடித்தவர்களை தினமும் சில நொடிகள் நினைத்துப் பார்த்தாலே போதுமே.

## 5. எப்போது அர்த்தம் பெறும் இந்நினைவு?

கல்லறைகள் சுத்தம் செய்து அழகூட்டுவதால் மட்டுமல்ல. கல்லறைக்கு போகும் உள்ளத்தை அழகுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தில் தீபத்தாலும் தூபத்தாலும் உண்டாகும். நறுமணத்தினால் மட்டுமல்ல, நம் வாழ்வின் நன்மை மற்றவருக்கும் நலன் தரவேண்டும் என்னும் எண்ணம் நம்மில் பரவுவதாலும், இறந்தோருக்காகச் செய்யப்படும் உணவு படையல்கள், நினைவுத் திருப்பலிகளில் மட்டுமல்ல, அவர்களிடம் விளங்கிய நல்லவைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதிலும், எடுத்துக் காட்டுவதிலும் தான் இருக்கிறது. இத்திருவிழாவின் உண்மைப் பொருள். மரபுகள் உடல் வழி உயிர் வழி பரிமாண மாற்றத்தோடு நின்றுவிடுவதில்லை. மதிப்பீடுகளின் மாற்றமே உண்மையான மரபுவழித் தோன்றல்கள். உருவத் தோற்றங்களே உண்மை மாற்றங்கள் என்று எண்ணியது போதும். உலகை மாற்றும் உன்னத உயிர் துடிப்புகளாக மாறுவோம்.

**வாருங்கள் நண்பர்களே!**
**நேற்றைய இறந்தோரிடமிருந்து**
**இன்றைய வாழ்வுக்கான பாடங்களை எடுத்துக் கொண்டு**
**நாளைய தலைமுறைக்கு நல்வழி**
**காட்டக்கூடியவர்களாய் கொண்டாடுவோம் இறந்தோரின் நினைவை...**

நீதிமான்களின் ஆன்மாக்கள்
கடவுளின் கையில் உள்ளன" (சா. ஞா 3:1)

**விண்ணகத்தின் பேரின்பமே இறைவா!**
**இறந்த ஆன்மாக்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். ஆன்மாக்களின் மீது அளப்பரிய அன்பு கொண்ட ஆண்டவரே! இவ்வுலகில் உயிர்வாழும் ஒவ்வொருவருடைய ஆன்மாவும் உமக்கு மட்டுமே சொந்தமானது. ஏனெனில் 'மனித உடலைவிட மனித ஆன்மா மீது தாகம் கொண்டவர் நீரோ!' எனவே இறந்த ஆன்மாக்களின் மீட்புக்காக உம்மிடம் முழங்கால் படியிட்டு வேண்டி நம்பிக்கையோடு நாடி வருகின்றோம். இறந்த ஆன்மாக்களுக்கும். குறிப்பாக உத்தரிக்கின்ற நிலையில் இருக்கின்ற ஆன்மாக்களுக்கும் முடிவில்லா பேரின்ப வாழ்வைத் தந்தருளும். உமது பேரன்பையும், பேரிரக்கத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்வார்களாக.**

# மனிதகுலத்திற்கு 175 ஆண்டு காலமாக பணி புரிவதற்கென்று ஆசி பெற்ற திருச்சிலுவைக்கன்னியர் சபை [மென்சிங்கன்]

17.10.2019





சென்ற இதழின் தொடர்ச்சி...

## விவிலியப் பெண்கள்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் காணப்படும் சில விவிலியப் பெண்களின் வழியை அன்னை பேர்னாடாவும் பின்பற்றினாள். ஆண் ஆதிக்கவாதிகளுக்கு தம் சமத்துவத்தை உறுதிப்படுத்த முயன்ற பல விவிலியப் பெண்கள் உள்ளனர். உதாரணமாக டெபோரா (நீதிபதி 4-5) ஓர் தீர்க்கதரிசி, கவிஞர், தலைவர் மற்றும் கலைப்படுபவர். ராணி வஸ்தி (எஸ்தர் 1:11) ராஜா மற்றும் அவரது குடிகாரர்கள் முன் ஆஜராக வேண்டும் என்ற ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்து விட்டாள். மகதலா மரியா ஒரு தொலை நோக்கு பார்வையாளர், தலைவர் மற்றும் தைரியமான பெண்மணி, (யோவான் 9:25) பாலின வேடங்களை மாற்றியமைத்தார். இயேசுவின் பாடுகள் மரணத்தின் போது சிலுவையடியில் உடனிருந்தார். 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களில் அன்னை பேர்னாடாவும் ஒருவர். தனது உறுதியான எதிர்ப்பு மற்றும் மேலாதிக்க வரிசைக்கு எதிரான போராட்டங்கள் மூலம் ஒரு "பெண் துறவியாக" திகழ்ந்தது மட்டுமல்லாது தனது பிள்ளைகளுக்கும், மென்சிங்கனிலுள்ள இளம் பெண்களுக்கும் உரித்தான மனித மாண்பை தேடிக்கொடுத்தார். இவ்வாறு அன்னையினுடைய மெய்யான நோக்கம், அர்ப்பணிப்பு, இறைவன் பாலுள்ள நம்பிக்கை மற்றும் சூழ்நிலை யதார்த்தங்களுக்கு திறந்த தன்மை போன்ற நற்குணங்கள் இவரில் திகழாவிடின் சபையின் காலம் அதன் மூன்று ஆண்டுகளுக்குள் முடக்கப்பட்டிருக்கும். மாறாக அது உலகளாவிய ரீதியில் பரந்தது. ஆனால், அதிசயம் யாதெனில் நாற்பது வயதில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அன்னை இறந்த போது அருட்தந்தை புசிங்கர் (Businger) எழுதுகின்றார்: "இந்த சிறந்த பெண்ணில் நான் ஒரு சிறந்த நபரைச் சந்தித்தேன். ஆத்மாவின் பெண்மையின் மகத்துவம், விவேகம், குழந்தை போல் பக்தியுடன் வளைந்து கொடுக்கும் தன்மை போன்றன என்னை கவர்ந்தன. ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக இந்த இலட்சிய நபருடன் என்னை நெருங்கிய தொடர்பு கொள்ள அனுமதித்த இறைவனுக்கு நான் நன்றி கூறுகின்றேன்". (Schonenberg pg61)

மிகவும் அடக்கமான முறையிலும், புத்திசாலித்தனமாகவும், விவேகமாகவும் தன்னுடைய கருத்துக்களை நிறுவுனருக்கும், ஆயர், அருட்தந்தை ரோலின் (Rollin), அபோட் பிர்கர் (Abbot Birker) மற்றும் பிறருக்கும் வெளிப்படுத்தினார். 1861 இல் அபோட் பிர்கர் அன்னை பேர்னாடாவுடன் கடினமாக இருந்த போது அருட்தந்தை தியோடோசியஸ் தானே பொறுப்பாளர் ரூட்டினரிடம் (Rutinan) "எந்தவொரு சகோதரியும் அன்னை பேர்னாடாவின் இடத்தை ஈடு செய்ய இயலாது அவர் மிகவும் புத்திசாலி, விவேகத்தின் மூன்றாவது கண் மற்றும் நம்பிக்கை நிறைந்தவர்" கூறினார். அன்னை பேர்னாடாவும் அருட்தந்தை தியோடோசியசும் ஒருவரையொருவர் ஆழமாக புரிந்து கொண்டனர். இரு சபைகளாக பிரிவுற்ற பின்னரும் நிறுவுனரும் அன்னை பேர்னாடாவும் ஒருவரையொருவர் சந்தித்தும் சகோதரிகள் தமக்கான வழிகாட்டல்களைப் பெற்று சகோதர, சகோதரிகள் என்னும் அன்புறவில் நிலைத்திருந்தனர்.

## உலகளாவிய விரிவாக்கம்

திருச்சிலுவை சகோதரிகள் செய்த தன்னலமற்ற மற்றும் பலனளிக்கும் சேவையால் ஈர்க்கப்பட்டு, பல்வேறு நாடுகள் தங்கள் மக்களுக்கு சேவை செய்ய



சகோதரிகளை அழைத்தனர். கலாச்சார மாற்றங்கள் மற்றும் மொழித்தடைகள் குறித்து அச்சமின்றி அருட்சகோதரிகள் விருப்பத்தடன் அழைப்புக்களை ஏற்றுக்கொண்டனர். "நம்பிக்கையின் விதைகள்" முன் சென்று நகர்ந்து 1883 இல் ஆபிரிக்காவிலும், 1896 இல் ஜேர்மனியிலும், 1901 இல் தென் அமெரிக்கா ரியோ பியானோவிலும், 1930 இல் சிலியிலும், 2002 இல் பேருவிலும், 1888 இல் இத்தாலியிலும், 1902 இல் இங்கிலாந்திலும், 1930 இல் அயர்லாந்திலும், 1953 இல் ஆஜென்ரினாவிலும், 1906 இல் இந்தியாவிலுள்ள திருவானந்தபுரத்திலும், 1930 இல் இலங்கையிலும், 1937இல் கேப்பிலும், 1907இல் லெசோத்தோவிலும், 1936 இல் சம்பியாவிலும், 1922 இல் நமீபியாவிலும், 1956 இல் சிம்பாவேயிலும், 1967 இல் மத்திய இந்தியா மற்றும் வட இந்திய மாநிலங்களிலும் விதைக்கப்பட்டன. முன்னோடிகளான மிஷனரி சகோதரிகள் அனைத்து சவால்களையும் துணிச்சலாக எதிர்கொண்டனர். இதற்கு எடுத்துக்காட்டாக முதல் ஐந்து சகோதரிகள் டேர்பன் (Durban) தென் ஆபிரிக்காவிற்கு நீண்ட பயணத்தை மேற்கொண்டு ஆடித்திங்கள் நள்ளிரவு 24ம் நாள் 1883 இல் வருகை தந்தனர்.

> 'எந்தவொரு சகோதரியும் அன்னை பேர்னாடாவின் இடத்தை ஈடு செய்ய இயலாது அவர் மிகவும் புத்திசாலி, விவேகத்தின் மூன்றாவது கண் மற்றும் நம்பிக்கை நிறைந்தவர்'

இங்கு திருச்சிலுவை சகோதரிகள் மூன்று சிறிய குடிசைகளுக்குள் நகர்ந்து சென்றனர்: பின்னர் அவ்விடங்களே அவர்களின் கன்னியர் மடமாக மாறியது. இந்தியா மற்றும் இலங்கையைத் தவிர ஏனைய அனைத்து நாடுகளும் "முழுமையான கல்வியின் மூலம் இளைஞர்களை உருவாக்குதல்" என்னும் எம் சபையின் அடிப்படை நோக்கத்திற்கேற்ப செயற்பட்டதுடன் எம் நாட்டில் அருட்சகோதரிகள் தாதியர்களாக மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு பதிலிறுத்தி நோயுற்றவர்களை பராமரித்தனர். இருப்பினும் உலகளவில் நிகழும் மாற்றங்களை கருத்தில் கொண்டு சகோதரிகள் புதியதை அடைய தங்களைத் தூண்டுகின்றார்கள். சூழ்நிலையின் தேவைகளுக்கு ஏற்ப சமூக, கலாச்சார, மத, ஆரோக்கியம் மற்றும் பொருளாதார மட்டங்களில் பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இளைஞர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்குரிய கல்வியை உயர் நிலைப் பள்ளிகள் வரை சகோதரிகள் வழங்குகின்றனர்.

## இலங்கையில் கால் பதிப்பு

அருட்சகோதரிகளான பெனடிக்ற்ரா ஸ்ரொக்கர்



(Benedicta Stoker), ஒத்மக்ருண்டர் (OthmaKrunter), மரியா கரோலா (Maria Carola ) ஆகிய மூவரும் 1930ம் வருடம் ஆவணி மாதம் 26ம் நாள் யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்காவற்றுறை என்னும் தீவில் தம் கால்களைப் பதித்து, துன்பப்படும் மனித குலத்திற்கு சேவையாற்ற ஊர்காவற்றுறை மருத்துவமனையில் தம் பணியை ஆரம்பித்தனர். மக்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் பலமுறை வேண்டுகோளுக்கிணங்க ஏழு அருட்சகோதரிகள் யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் தாதியர்களாக கடமையேற்றனர். அன்னை அலோசியா ரூஸ்லி (Aloisia Roosli) இலங்கை மாகாணத்தின் முதல் மாகாணத் தலைவியாகவும், வைத்தியசாலையின் மேல் தாதியாகவும், பகுதி நிர்வாகியாகவும் பணியாற்றினார்.

துரதிஷ்டவசமாக 1963இல் அப்போதைய அரசாங்கம் அனைத்து மத சகோதரிகளையும் மருத்துவமனைகளில் பணியாற்றுவதை நிறுத்தியது மட்டுமல்லாமல் அனைத்து மிஷனரிமாரும் நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் தீவை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. இவ்வாறாக இருபத்தைந்து வருடங்களாக அரச மருத்துவமனைகளில் பணியாற்றிய அருட்சகோதரிகளின் அர்ப்பணிப்பான சேவை நிறைவெய்தியது.

அருட்சகோதரிகள் தங்கள் படைப்பாற்றல் மற்றும் வாழ்க்கையின் புதிய தன்மையுடன் புதிய சவால்களை எதிர்கொண்டனர். மேலும் புதிய நுண்ணறிவுகளை அடைந்தனர். இதன் விளைவாக பணிச்செயற்பாடுகள் மாறுபட்டன. பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழக நிலை வரை கற்பித்தல், சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள், நான்கு வெவ்வேறு



தாதியர் இல்லங்களில் வழங்கப்பட்ட தாதிய பராமரிப்பு, யாழ்ப்பாணம் மற்றும் பரந்தனில் இரண்டு சுகாதார மையங்கள், கொழும்புத்துறை, திருகோணமலையில் இரு வயோதிப இல்லங்கள், துன்புறும் மனித குலத்திற்கு மறைபரப்புச் சேவை போன்ற பணிகளை ஆற்றுகின்றனர். ஏழைகளுக்கு ஆறுதல், போரில் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கான வலுவூட்டல், போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்களின் மறு வாழ்வு, இளையோர் ஆலோசனை மற்றும் மலையக, அப்போஸ்தலிக்கப் பணி போன்ற பணிகளுடன் சகோதரிகள் குணப்படுத்துபவர்களாக செயற்படுவதோடு இன்று எம் சகோதரிகள் இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும், பாக்கிஸ்தான் கராச்சியிலும் பணியாற்றுகின்றனர். இது ஆச்சரியமானதொன்றல்ல: ஏனெனில் அருட்சகோதரிகளின் நெகிழ்வுத்தன்மை, இயக்கம், நேரம் மாறிக்கொண்டே இருப்பதால் புதிய சவால்கள், எதிர்பார்ப்புக்கள், புதிய தேவைகள் மத்தியில் "நம்பிக்கையின் விதைகளாக" செயலாற்றுகின்றனர்.

கடவுள் மீதான அவர்களின் அறிவையும் அர்ப்பணிப்பையும் காலத்தின் தேவைகளுக்கேற்ப அவருடைய பிள்ளைகளுக்கான சேவையையும் ஆற்றுகின்றனர். இந்த நூற்று எழுபத்தைந்து ஆண்டுகளில் மலையிலும், பள்ளத்தாக்கிலும் பயணித்த சபை எப்போதும் மனிதகுல சேவையில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு வருகின்றது. இன்று எம் அன்னை மரியாளுடன் சேர்ந்து, "என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது: ஏனெனில் அவர் அருஞ்செயல் பல புரிந்துள்ளார்" என அக்களிக்கின்றோம்.

தொகுப்பு :
அருட்சகோதரி கொன்சிலியா மரியாம்பிள்ளை (தி.சி)
தமிழாக்கம் :
அருட்சகோதரி வேகினியா வோல்ரர் (தி.சி)

**உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.
மின்னஞ்சல் :
cgnanaoli@yahoo.com



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 31வது ஞாயிறு (03.11.2019)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** அன்பின் இறைமக்களே பொதுகாலத்தின் 31வது ஞாயிறு தினத்தில் இறைபிரசன்னத்தில் கூடியிருக்கும் நாம், இன்று ஆண்டவர் இயேசு கூறும் இறைவார்த்தையின் மையம் மனம் மாறுங்கள், இறைவழி செல்வீர்கள். இன்றைய முதல் வாசகம் சாலமோனின் ஞான நூலில் இருந்து எடுக்கப்படுகின்றது. இயற்கை என்பது கடவுளால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஒரு கொடை மனிதன் தனது தன்னலத்தால் அதை பாழாக்கினான். இதனால் இயற்கையும் தன் சீற்றத்தை காட்ட ஆரம்பித்துள்ளது. ஆகவே இன்றைய சூழலில் கடவுளின் செயல்பாடுகளை புரிந்து, மாற்றம் பெற அழைக்கப்படுகின்றோம். இன்றைய நற்செய்தி வாசகம். இயேசு சக்கேயுவைச் சந்திக்கின்றார். சக்கேயுவின் மனமாற்றம் அதனால் இயேசுவைக் காண விரும்புகின்றார். இயேசுவைக் கண்டார், மாறினார், தன்னிடம் இருப்பதை பலமடங்கு பகிர்ந்துக் கொண்டார். இறைவழி வாழ தொடங்கினார். இறைவழி வாழ்வதற்கான வழிகளை புனித பவுல் தெசலோனியருக்கு எழுதிய இரண்டாம் வாசகத்தில் குறிப்பிடுகிறார் யாரும் உங்களை ஏமாற்ற இடம் கொடாதீர்கள் என்று எச்சரிக்கிறார். ஆகவே நாமும் தீமையிலிருந்து விடுபடுவோம். மனம் மாறுவோம். தீமைகளை எதிர்த்திடுவோம். இறைவனில் நம்பிக்கை கொண்டு வாழ தொடரும் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசகம் : சா. ஞா. 11:22, 12:2**
நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லார் மீதும் இரங்குகின்றீர்.

**பதிலுரைப் பாடல் :**
என் கடவுளே, என் அரசே! உம் பெயரை என்றும் போற்றுவேன்.

**இரண்டாம் வாசகம் : 2 தெச 1: 11 – 2: 2**
நம் ஆண்டவராகிய இயேசுவின் பெயருக்கும் உங்களுக்கும் மேன்மை உண்டாகுக!

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 19: 1–10**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பின் இறைவா! திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்களை ஆசிர்வதித்து அவர்களை வழிநடத்த வேண்டுமென்றும், அவர்களின் பணி வாழ்வு மக்களுக்கு ஒளி கொடுக்கவும் வேண்டுமென்று...

இருளகற்றும் ஆண்டவரே இன்றைய சூழ்நிலைகளில் தீமைகள், அழிவு, தீவிரவாத போராட்டங்கள், வன்முறைகள் போன்றவை ஒழித்து இவற்றை நடத்துபவர்கள் மனம் மாறவும், பாவத்தில் இருந்து விலகி வாழ வரமருள வேண்டுமென்று...

அன்பின் இறைவா, உண்மையான அரசாட்சி உருவாகவும், தீயோர் பொல்லாரின் கையினின்று எமது நாட்டை காப்பாற்றவும், மக்களின் நலன் கருதி செயல்படும் நல்லாட்சியை எமக்கு தந்திட வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 32வது ஞாயிறு (10.11.2019)**

**வாசக விளக்கம்:** அன்பின் இறைமக்களே! பொதுகாலத்தின் 32ம் வார முதல் நாளன்று கால்பதிக்கும் எமக்கு இன்றைய 3 வாசகங்களும், எமக்கு எடுத்துரைப்பது கடவுள் நம்பிக்கைக்கு உரியவர் அவரை நம்பினோர் கைவிடப்படார். முதலாம் வாசகம் மக்கபேயர் நூலில் இருந்து எடுக்கப்படுகிறது. இறப்பதற்கு முன் மனித வாழ்வு எப்படி இருக்க வேண்டும். கட்டளைகளைக் கடைப்பிடி, இறைவனை எதிர்க்கின்றவர்களுக்கு அறைகூவல் விடு என்று கூறுகிறது. இன்றைய நற்செய்தியானது உயிர்த்தெழுதல் பற்றி கேள்வியானது சதுசேயர்களால் இயேசுவிடம் எழுப்பப்பட்டது. இந்த கேள்விகளுக்கு பதில் இயேசு மிக அழகாக கூறுகிறார். உயிர்த்த பின் உள்ள வாழ்வானது உலக நிலையைவிட வேறுபட்டது என்பதை தெளிவாகக் கூறுகிறார். உயிர்ப்பவர்கள் வானதூதர்களைப் போல் இருப்பார்கள். கடவுளின் மக்களாயும் இருப்பார்கள். ஆகவே இறைவனின் நம்பிக்கை கொண்டு அவர் நமக்கு வழங்கும் வாழ்வினை உரிமையாக்கிக் கொள்ள தொடரும் பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : 2 மக்கபேயர் 7: 1–2, 9–14**
நாங்கள் இறந்தபின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்.

**பதிலுரைப் பாடல் :**
விழித்தெழும்போது, ஆண்டவரே உம் உருவம் கண்டு நிறைவடைவேன்..

**இரண்டாம் வாசகம் : 2 தெச 2: 16 – 3: 5**
நல்லதையே சொல்லவும் செய்யவும் உங்களை ஆண்டவர் உறுதிப்படுத்துவாராக!

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! கிறிஸ்துவே இறந்தோருள் முதலில் உயிர்பெற்று எழுந்தவர் இவருக்கே மாட்சியும் ஆற்றலும் என்றென்றும் உரியன. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 20: 27–38**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பின் ஆண்டவரே உமது அழைப்பை ஏற்று பணி செய்யும், திருஅவையின் தலைவர்கள் தங்கள் பணியில் நிலைத்திருந்து எதிர்கொள்ளும் சவால்களுக்கு பயமின்றி முகம்கொடுக்கவும், இறைமக்களை ஒளியின் பாதையில் வழிநடந்திடவும் நிறைவான அருளை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று...

அன்பின் ஆண்டவரே உம் பொருட்டு எமக்கு வரும் சவால்களையும், எதிர்ப்புக்களையும், பொறுமையோடு ஏற்று உமது திருவுளத்திற்காக எம்மையே அர்ப்பணிக்க வரமருள வேண்டுமென்று...

அன்பின் இறைவா, எங்கள் வாழ்நாளெல்லாம் நீர் கூறியவற்றை வாழ்வாக்கிடவும், இறைவனின் வார்த்தைகளை எங்கும் பரப்பிட அவருக்காக அனைத்தையும் செய்திட திடம் அளித்தருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 14

# சாவு பற்றிய சிந்தனை

- மிக விரைவில் உனக்கு இங்கு முடிவு வந்துவிடும். எனவே, மறுவாழ்வை ஒட்டியவரையில் நீ எப்படி இருக்கிறாய் என்று எண்ணிப்பார்.
- மனிதன் இன்று இருக்கிறான், நாளை மறைந்துவிடுகிறான்.
- அவன் காட்சியிலிருந்து பிரிக்கப்பட்டதும் மனத்திலிருந்தும் விரைவில் மறைந்துவிடுகிறான்.
- நிகழ்வதை மட்டும் சிந்தித்துவிட்டு, வருவதைப் பற்றிக் கவலைகொள்ளாத மனித இதயத்தின் பேதமையும் கடினத்தன்மையும் தான் என்ன?
- இன்றே நீ இறக்கப்போகிறாய் என்றெண்ணி, உன் எல்லா செயல்களையும், சிந்தனையையும் சீரமைக்க வேண்டும்.
- உனக்கு நல்ல மனச்சான்று இருந்தால் நீ சாவுக்குப் பெரிதும் அஞ்சமாட்டாய்
- சாவுக்குத் தப்புவதைவிடப் பாவத்தினின்று நீங்குவது சிறப்பாகும்.
- நீ இன்று தயாராக இல்லையென்றால் நாளைக்கு எப்படி இருப்பாய்?
- நாளை உறுதியற்ற நாள், நாளை உனக்குக் கிடைக்கும் என நீ எப்படி அறிவாய்?
- இத்தனை குறைவாக நாம் திருந்தும்போது நீண்ட வாழ்க்கையால் என்ன பயன்?
- ஆ! நீண்ட வாழ்க்கை எப்பொழுதும் திருந்துவதில்லை. மாறாக, குற்றத்தைத்தான் மிகுதிப்படுத்துகின்றது!
- இந்த உலகில் நாம் ஒரு நாளாவது நல்ல ஒழுக்கமுடையவர்களாக வாழ்ந்திருந்தால்!
- பலர் தங்களது மனமாற்றத்தின் ஆண்டுகளைக் கணக்கிடுகின்றனர். ஆனால், அதன் பயனாகத் திருந்தியவர் மிகச் சிலரே.
- சாவு அஞ்சத்தக்கது என்றால், நீண்டநாள் வாழ்வது ஒரு கால் ஆபத்துமிக்கதாகவும் இருக்கும்.
- தனது மரணவேளையை எப்போதும் கண்முன் வைத்திருந்து சாவதற்குத் தன்னைத் தினந்தோறும் தயாரிப்பவன் பேறுபெற்றவன்.
- நீ எப்போதாவது மனிதன் உயிர் நீப்பதைக் கண்டிருந்தால், அதே வழியில் நீயும் செல்ல வேண்டும் என்று எண்ணு.
- காலையானதும் மாலைவரை நீ இருக்கமாட்டாய் என நினைத்துக் கொள்.
- மாலையானதும் காலைவரை நீ இருப்பாய் என்று துணிவு கொள்ளாதே.
- எனவே, நீ எப்பொழுதும் தயாராய் இரு, தயார் ஆகாத நிலையில் சாவு உன்னைக் காணாதிருக்கும் விதத்தில் உன் வாழ்க்கை அமையட்டும்.
- பலர் திடீரென, எதிர்பாராவிதமாய் உயிர் துறக்கின்றனர். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார் (மத் 24:42, 44, லூக் 12:40)
- அந்த இறுதிவேளை வரும்போது, உனது கடந்தகால முழு வாழ்வைப்பற்றி மிக மாறுபட்ட விதமாய்ச் சிந்திக்கத் தொடங்குவாய், நீ இவ்வளவு கவலையற்றுச் சோம்பியிருந்ததை எண்ணி மிக வருந்துவாய்.
- ஒருவன் சாகும்போது எப்படி இருக்க விரும்புகின்றானோ அப்படியே வாழும்போது நடந்துகொள்வது எத்துணை மகிழ்ச்சி! எத்துணை மதி!
- ஏனெனில், உலகை முற்றும் வெறுத்தல், நற்பண்பு வளர்ச்சியில் பேராவல் கொள்தல், கட்டுப்பாட்டில் அன்பு வைத்தல். கீழ்ப்படியத் துடித்தல், தன்னை ஒறுத்தல், எத்தனை பகைமையையும் கிறிஸ்துவின் அன்புக்காகப் பொறுமையுடன் சகித்தில், இவை அனைத்தும் நாம் மகிழ்ச்சியாக உயிர்துறக்க உறுதுணை புரிகின்றன.
- நலமாக இருக்கும்போது உன்னால் மிகுந்த நன்மைகள் செய்யமுடியும். ஆனால், நோயுற்ற நிலையில் உன்னால் எதைச் செய்ய இயலும் நான் அறியேன்.
- நோயினால் ஆன்ம வளர்ச்சி பெறுகிறவர் சிலர். அதுபோல் மிகுதியாகப் பயணம் செய்பவர்களில் புனிதம் அடைபவரும் சிலரே.
- நண்பரிலும், அயலாரிலும் உறுதி வைக்காதே, உனது மீட்பையும் எதிர்காலத்திற்கு எனத் தள்ளி வைக்காதே. ஏனெனில் நீ கருதுவதைவிட அதிக விரைவில் மனிதர்கள் உன்னை மறந்துவிடுவார்கள்.

தொடரும்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தவர்களுக்காக மனோத்தத்துவ ரீதியானதும் ஆன்மீகத்தை ஊட்டம் பெறவைப்பதுமான நிகழ்ச்சித்திட்டம்.

2019ம் ஆண்டு சித்திரை 21ம் நாள் உயிர்த்த ஞாயிறன்று கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் கட்டுவப்பிடிய புனித செபஸ்த்தியார் ஆலயம் பெரும் பாதிப்பிற்குள்ளானது. எண்ணற்ற மக்கள் மரணித்ததோடு பெரும்பாலான மக்கள் மிகுந்த பாதிப்புக்களை உடல் மற்றும் மன ரீதியாக பாதிக்கப்பட்டனர். இவ்வகையான பாதிப்புக்களில் இருந்து தம் மக்களை மீட்கும் பொருட்டு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையாலும், உயர்மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு. கலாநிதி. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை மற்றும் மேதகு. கலாநிதி. ஜே.டி. அந்தனி ஐயகொடி ஆண்டகையின் ஆலோசனையிலும் அருட்தந்தையர்தளைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

1. மேதகு. ஆயர். கலாநிதி. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை
2. மேதகு. ஆயர். கலாநிதி. ஜே.டி. அந்தனி ஐயகொடி ஆண்டகை
3. அருட்தந்தை. ஜீட் சமந்த பெர்ணான்டோ.
4. அருட்தந்தை. பிரிலி முத்துக்குடாரச்சி
5. அருட்தந்தை. கிஹான் ரிட்லி
6. அருட்தந்தை. க்ளோட் நோனிஸ்
7. அருட்தந்தை. பிரசாத் ஹர்ஷன
8. அருட்தந்தை. லோரன்ஸ் ராமநாயக்க
9. திரு. மேரியஸ் மதுராவல

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று 6 மாத காலத்தினை பூர்த்தி செய்வதுடன் இதுவரைக்காலமும் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த தேவையான விதத்தில் பங்காற்றியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீளாய்வு செய்ததின் மூலம் குடும்பங்களின் தேவைகளை இனங்கண்டு நிவாரண திட்டமானது 03 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 03 குழுக்கள் அமைக்கப்பட்டது.

1. ஆன்மீக நல சேவை
2. மனோதத்துவ அல்லது மனநல ஆலோசனைச்சேவை
3. சமூக நலச்சேவை

**1. ஆன்மீக நல சேவை**

அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய அருட்தந்தை. பிரசாத் ஹர்ஷன அவர்களுடைய தலைமைத்துவத்துடன் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் விசுவாச வழிக்காட்டல் குழுவானது (Faith Animation) தமது செயற்திட்ட முன்வரைபுகளை திட்டமிட்டு ஆன்மிக வழியில் வளர்ச்சி பெற வைப்பதற்கான நிகழ்ச்சிகளை வழிநடத்துகின்றனர். இதன் மிக முக்கிய நிகழ்வாக விசுவாச வழிக்காட்டல் குழு செத் சரண நிறுவனத்துடன் இணைந்து தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களை மன்னார் மருதமடு அன்னையின் தேவாலயத்திற்கு கொச்சிக்கடை மற்றும் கட்டுவப்பிடிய மக்களை யாத்திரையாக அழைத்துச்சென்றனர். இதன் முக்கிய அங்கமாக மன்னார் தோட்டவெளி மறைசாட்சிகளின் தேவாலயத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டமையாகும். 600க்கும் மேற்ப்பட்ட இறைமக்கள் இறைவிசுவாசத்தின் நிமித்தம் தமது உயிரை தியாகம் செய்த இவ்வாலயத்தில் தமது உறவுகளைக் கண்டடைந்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துப்பகிர்ந்தனர். தற்போது மேலதிக செயற்பாடுகள் ஒழுங்குற நடைபெற்று வருகின்றது.

**2. மனோதத்துவ அல்லது மனநல ஆலோசனைச்சேவை**

தமது உறவுகளை இழந்து "வாழ்வாதாரத்தை இழந்து" பாரிய காயங்களுக்குள்ளானவர்களின் தவிப்பினால் நொறுங்குண்ட இதயங்களை குணமாக்க பேராயர் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனைக்கிணங்க அருட்தந்தை. க்ளோட் நோனிஸ் தலைமையிலான தொழில் முறை மனநல ஆலோசகர்கள் (Professional Counselors) மற்றும் வைத்தியர்கள் கொண்ட குழுவுடன் மன நல ஆலோசனைச்சேவை வழங்கப்படுகின்றது. வீடு தரிசிப்பு மற்றும் பாதிப்பின் அதிர்ச்சியினால் மனநலமற்றவர்களை சந்தித்தல் போன்ற சேவைகள் செய்யப்படுகின்றது. இரவுப்பகல் பாராமல் இவர்கள் செய்த சேவை அளப்பறியது. இவர்களுடன் 80 க்கும் அதிகமான மனநல ஆலோசகர்கள் மற்றும் வைத்தியர்களுடன் இணைந்து கட்டுவப்பிடிய வலய பங்குகளுக்கு தேவையான நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர். இவை பிள்ளைகள், இளைஞர்கள், பெற்றோர் மற்றும் முதியவருக்கானவையாக இருந்தது. "எம்மாவுஸ்" மனநல ஆலோசனை நிலையத்தினை கட்டுவபிட்டியில் ஸ்தாபித்து மக்களுக்கான சேவையை செய்கின்றது. மேலும் செத் அலைவரிசையின் ஊடாக ஒரு மணித்தியாலத்திற்கான மனநல ஆலோசனை நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகின்றது.

**3. சமூக நலச்சேவை**

முதல் இரண்டு தேவைகளும் பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக அமைந்தது. இது மிகவும் சவாலான செயற்பாடாக அமைந்தது. சமூக நலச்சேவையின் பொருட்டு மக்களின் வெளிவாரியான தேவைகளைப் பூர்த்தி செய்வதன் நோக்கமாக காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் 05 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

1. மருத்துவத் தேவைகள்
2. வாழ்வாதாரம்
3. வருமானம் ஏற்படுத்தல்
4. கல்வி மற்றும் உதவித்தொகை
5. வீடமைப்புத்திட்டம்

பேராயர் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய அருட்தந்தை. லோரன்ஸ் ராமநாயக்க அடிகளாரின் தலைமையில் செத் சரண நிறுவனம் இவ் வேலைத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**1. மருத்துவத் தேவைகள்**

காயப்பட்ட குடும்பங்கள் 399 ஆகும். அதிக ஆபத்தான காயங்களுடையவர்களாக 10 பேர் காணப்படுகின்றனர். இவர்களுக்காக பாரிய அளவு பணத்தொகை செலவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களால் செலவிடப்பட்ட பணம் மீள அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

**2. வாழ்வாதாரம்**

மேற்குறிப்பிட்ட தாக்குதலினால் பாதிப்படைந்த குடும்பங்கள் தங்களின் பராமரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர் மற்றும் சிலர் இறந்தனர். அவ்வாறன குடும்பங்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதுடன் நாளாந்த தேவைகளை அறிந்து செயற்படுகின்றது.

**3. வருமானம் ஏற்படுத்தல்**

பாதிக்கப்பட்ட 285 - 119 குடும்பங்களில் மீளாய்வு செய்யப்பட்டதில் கட்டுவபிட்டியில் 64 குடும்பங்களுக்கும் "கொச்சிக்கடையில் 46 குடும்பங்களுக்கும் நேரடி உதவி தேவைப்படுவதாக கண்டறியப்பட்டது. இதன் மூலம் குடும்பங்களின் பிரதான பராமரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டிருந்ததை அடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக வருவாய் ஏற்படுத்தும் வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது".

**4. கல்வி மற்றும் உதவித்தொகை**

பேராயர் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய ஏற்படுத்தப்பட்ட விசேட குழுவினரின் வழிக்காட்டலுக்கமைய பாதிக்கப்பட்ட குடும்பங்களில் காணப்படும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட இருக்கின்றது. எனவே 325 பிள்ளைகளுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் ஆரம்ப வைபவம் மார்கழி மாதம் 1ம் நாள் நடைப்பெறவிருக்கின்றது. கொச்சிக்கடை, கட்டுவப்பிட்டிய பிள்ளைகள் அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர்.

## கொச்சிக்கடையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நன்கொடை

| Reg . No | Amount |
|---|---|
| KO 01 | 340,000.00 |
| KO 02 | 310,000.00 |
| KO 03 | 675,000.00 |
| KO 04 | 512,483.00 |
| KO 05 | 435,000.00 |
| KO 06 | 1,537,551.37 |
| KO 07 | 285,000.00 |
| KO 08 | 400,000.00 |
| KO 09 | 450,000.00 |
| KO 10 | 425,000.00 |
| KO 11 | 463,094.00 |
| KO 12 | 450,000.00 |
| KO 13 | 295,000.00 |
| KO 14 | 425,000.00 |
| KO 15 | 425,000.00 |
| KO 16 | 375,000.00 |
| KO 17 | 275,000.00 |
| KO 18 | 458,775.00 |
| KO 19 | 450,000.00 |
| KO 20 | 239,397.81 |
| KO 21 | 425,000.00 |
| KO 22 | 450,000.00 |

| | |
|---|---|
| KO 23 | 300,000.00 |
| KO 24 | 350,000.00 |
| KO 25 | 400,000.00 |
| KO 26 | 400,000.00 |
| KO 27 | 618,094.00 |
| KO 28 | 500,000.00 |
| KO 29 | 510,000.00 |
| KO 30 | 509,962.50 |
| KO 31 | 450,000.00 |
| KO 32 | 430,000.00 |
| KO 33 | 575,000.00 |
| KO 34 | 450,000.00 |
| KO 35 | 490,000.00 |
| KO 36 | 450,000.00 |
| KO 37 | 504,996.50 |
| KO 38 | 440,000.00 |
| KO 39 | 300,000.00 |
| KO 40 | 295,000.00 |
| KO 41 | 100,000.00 |
| KO 42 | 720,000.00 |
| KO 43 | 775,714.84 |
| KO 44 | 250,000.00 |
| KO 45 | 475,000.00 |

| | |
|---|---|
| KO 46 | 228,788.00 |
| KO47 | 400,000.00 |
| KO 48 | 225,000.00 |
| KO 49 | 525,000.00 |
| KO 50 | 325,000.00 |
| KO 51 | 300,000.00 |
| KO 52 | 360,000.00 |
| KO 53 | 350,000.00 |
| KO 54 | 380,000.00 |
| KO 55 | 490,000.00 |
| KO 56 | 275,000.00 |
| KO 57 | 200,000.00 |
| KO 58 | 100,000.00 |
| KO 59 | 285,000.00 |
| KO 60 | 300,000.00 |
| KO 61 | 600,000.00 |
| KO 62 | 1,105,683.25 |
| KO 63 | 485,000.00 |
| KO 64 | 325,000.00 |
| KO 65 | 325,000.00 |
| KO 66 | 380,340.00 |
| KO 67 | 260,000.00 |
| KO 68 | 245,000.00 |

| | |
|---|---|
| KO 69 | 210,000.00 |
| KO 70 | 325,000.00 |
| KO 71 | 175,000.00 |
| KO 72 | 851,186.57 |
| KO 73 | 275,000.00 |
| KO 74 | 205,000.00 |
| KO 75 | 425,000.00 |
| KO 76 | 250,000.00 |
| KO 77 | 325,000.00 |
| KO 78 | 325,000.00 |
| KO 79 | 210,000.00 |
| KO 80 | 200,000.00 |
| KO 81 | 330,000.00 |
| KO 82 | 200,000.00 |
| KO 83 | 180,000.00 |
| KO 84 | 110,000.00 |
| KO 85 | 175,000.00 |
| KO 86 | 225,000.00 |
| KO 87 | 60,000.00 |
| KO 88 | 400,000.00 |
| KO 89 | 270,000.00 |
| KO 90 | 250,000.00 |
| KO 91 | 250,000.00 |

| | |
|---|---|
| KO 92 | 250,000.00 |
| KO 93 | 200,000.00 |
| KO 94 | 360,000.00 |
| KO 95 | 180,000.00 |
| KO 96 | 225,000.00 |
| KO 97 | 1,200,000.00 |
| KO 98 | 300,000.00 |
| KO 99 | 200,000.00 |
| KO 100 | 200,000.00 |
| KO 101 | 410,052.13 |
| KO 102 | 80,000.00 |
| KO 103 | 300,000.00 |
| KO 104 | 50,000.00 |
| KO 105 | 100,000.00 |
| KO 106 | 200,000.00 |
| KO 107 | 100,000.00 |
| KO 109 | 100,000.00 |
| KO 110 | 200,000.00 |
| KO 113 | 50,000.00 |
| KO 114 | 50,000.00 |
| | **39,846,118.97** |
| | **100,000.00** |
| | **(39,846,118.97)** |

## கட்டுவாப்பி... குடும்பங்க...

| Ref. No | Total |
|---|---|
| KA 1 | 200,000.00 |
| KA 2 | 300,000.00 |
| KA 3 | 152,500.00 |
| KA 4 | 200,000.00 |
| KA 5 | 1,650,000.00 |
| KA 6 | 400,000.00 |
| KA 7 | 280,000.00 |
| KA 8 | 330,000.00 |
| KA 9 | 360,000.00 |
| KA 10 | 350,000.00 |
| KA 11 | 275,000.00 |
| KA 12 | 310,000.00 |
| KA 13 | 481,000.00 |
| KA 14 | 350,000.00 |
| KA 15 | 535,000.00 |
| KA 16 | 425,000.00 |
| KA 17 | 776,750.00 |
| KA 18 | 800,000.00 |
| KA 19 | 250,000.00 |
| KA 20 | 460,000.00 |
| KA 21 | 560,000.00 |
| KA 22 | 200,000.00 |
| KA 23 | 300,000.00 |

**5. வீடமைப்புத்திட்டம்**

பாதிக்கப்பட்டவர்களில் வாடகை வீட்டில் வசிப்போரை சொந்த வீடுகளில் அமர்த்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டு கட்டுவப்பிட்டியில் வாழும் 25 குடும்பங்களுக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு வீடுகள் அமைப்பதற்கான ஒத்துழைப்பு வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்றது. மேலும் கொச்சிக்கடை பகுதியில் பாதிக்கப்பட்டு வாடகை வீட்டில் வசிப்போருக்கான காணிகள் கொள்வனவு செய்ய இயலாமை இருப்பதனால் அவர்ளை அடுக்கு மாடி வீடுகளில் குடியமர்த்த அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படகின்றது.

கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் 6 மாதகாலமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பகிரப்பட்ட நிதித் தொடர்பான தகவல்களாகும். பேராயர் கர்தினால் ஆண்டகையின் நன்கொடையானது

| | |
|---|---|
| காணி கொள்வனவு | 53,000,000.00 |
| கல்வி உதவித்தொகை 325 | 102,000,000.00 |
| மனநல ஆலோசனையின் மொத்த செலவு | 3,568,500.00 |
| விசுவாச வழிக்காட்டலின் மொத்த செலவு | 4,829,688.82 |
| சமூக நலச்சேவை (Distribution of cash grants for 399 families) | 131,546,325.49 |
| பிற செலவீனம் | 1,231,478.21<br>**296,175,992.52** |
| கர்தினால் நன்கொடை | 386,705,000.00 |
| மிகுதி (For Medical and Income Generation) | **90,529,007.48** |

இவ்வாறாகப் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை பதிவு செய்வதற்கு பிரத்தியேகமான பதிவு இலக்கத்தை வழங்கியுள்ளோம். கொச்சிகடை மக்களுக்கு KO எனும் ஆங்கில எழுத்துடன் கூடிய இலக்கங்களும் (KO 000) கட்டுவப்பிட்டிய மக்களுக்கு (KA 000) என்பதன் முறையே பதிவு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. தகவல்களின் நம்பகத்தன்மையை பாதுகாப்பதற்கும், தனிநபரின் சுயமரியாதையின் நிமித்தமும் இவ்வாறு பதிவு மேற்கொள்ளப்பட்டது.

**அருட்தந்தை.லோரன்ஸ் ராமநாயக்க.**
**இயக்குனர்.**
**செத் சரண கரித்தாஸ் கொழும்பு.**



## பிட்டியில் பாதிக்கப்பட்ட
## ளுக்கான நன்கொடை

| | |
|---|---|
| KA 24 | 350,000.00 |
| KA 25 | 539,198.29 |
| KA 26 | 550,000.00 |
| KA 27 | 1,900,000.00 |
| KA 28 | 250,000.00 |
| KA 29 | 450,000.00 |
| KA 30 | 275,000.00 |
| KA 31 | 350,000.00 |
| KA 32 | 365,000.00 |
| KA 33 | 250,000.00 |
| KA 34 | 300,000.00 |
| KA 35 | 100,000.00 |
| KA 36 | 250,000.00 |
| KA 37 | 650,000.00 |
| KA 38 | 3,485,420.00 |
| KA 39 | 2,299,703.00 |
| KA 40 | 320,000.00 |
| KA 41 | 340,000.00 |
| KA 42 | 480,000.00 |
| KA 43 | 2,616,335.61 |
| KA 44 | 310,000.00 |
| KA 45 | 250,000.00 |
| KA 46 | 100,000.00 |
| KA 47 | 480,000.00 |

| | |
|---|---|
| KA 48 | 380,000.00 |
| KA 49 | 425,000.00 |
| KA 50 | 440,000.00 |
| KA 51 | 600,000.00 |
| KA 52 | 200,000.00 |
| KA 53 | 420,000.00 |
| KA 54 | 370,000.00 |
| KA 55 | 325,000.00 |
| KA 56 | 200,000.00 |
| KA 57 | 687,000.00 |
| KA 58 | 320,625.90 |
| KA 60 | 275,000.00 |
| KA 61 | 200,000.00 |
| KA 62 | 229,900.00 |
| KA 63 | 220,000.00 |
| KA 64 | 1,465,000.00 |
| KA 65 | 358,265.08 |
| KA 66 | 210,000.00 |
| KA 69 | 160,000.00 |
| KA 70 | 75,000.00 |
| KA 71 | 500,000.00 |
| KA 72 | 150,000.00 |
| KA 73 | 146,750.00 |
| KA 74 | 150,000.00 |

| | |
|---|---|
| KA 75 | 225,000.00 |
| KA 76 | 400,000.00 |
| KA 77 | 310,000.00 |
| KA 78 | 300,000.00 |
| KA 79 | 209,661.64 |
| KA 80 | 200,000.00 |
| KA 81 | 250,000.00 |
| KA 82 | 200,000.00 |
| KA 84 | 912,495.78 |
| KA 85 | 350,000.00 |
| KA 86 | 218,550.00 |
| KA 87 | 325,000.00 |
| KA 88 | 386,750.00 |
| KA 89 | 200,000.00 |
| KA 90 | 150,000.00 |
| KA 91 | 350,000.00 |
| KA 92 | 150,000.00 |
| KA 93 | 160,000.00 |
| KA 94 | 273,000.00 |
| KA 96 | 215,000.00 |
| KA 97 | 260,000.00 |
| KA 98 | 390,000.00 |
| KA 99 | 200,000.00 |
| KA 102 | 60,000.00 |
| KA 104 | 515,000.00 |
| KA 105 | 241,000.00 |
| KA 106 | 275,000.00 |
| KA 107 | 250,000.00 |
| KA 108 | 150,000.00 |
| KA 109 | 190,000.00 |
| KA 110 | 475,000.00 |
| KA 111 | 430,000.00 |
| KA 112 | 385,000.00 |
| KA 113 | 325,000.00 |
| KA 114 | 375,000.00 |
| KA 115 | 300,000.00 |
| KA 116 | 350,000.00 |
| KA 117 | 204,961.60 |
| KA 118 | 325,650.00 |
| KA 119 | 590,000.00 |
| KA 120 | 170,000.00 |
| KA 122 | 415,000.00 |
| KA 123 | 587,416.00 |
| KA 124 | 410,197.29 |
| KA 125 | 265,000.00 |
| KA 126 | 695,000.00 |
| KA 127 | 221,750.00 |

| | |
|---|---|
| KA 129 | 50,000.00 |
| KA 130 | 190,000.00 |
| KA 131 | 520,000.00 |
| KA 132 | 485,000.00 |
| KA 134 | 310,000.00 |
| KA 135 | 360,000.00 |
| KA 136 | 180,000.00 |
| KA 137 | 310,000.00 |
| KA 138 | 200,000.00 |
| KA 139 | 180,000.00 |
| KA 140 | 250,000.00 |
| KA 141 | 100,000.00 |
| KA 142 | 150,000.00 |
| KA 143 | 140,000.00 |
| KA 144 | 140,000.00 |
| KA 145 | 140,000.00 |
| KA 146 | 210,000.00 |
| KA 147 | 210,000.00 |
| KA 148 | 200,000.00 |
| KA 149 | 240,000.00 |
| KA 150 | 470,000.00 |
| KA 151 | 200,000.00 |
| KA 152 | 260,000.00 |
| KA 153 | 310,000.00 |
| KA 154 | 410,000.00 |
| KA 155 | 260,000.00 |
| KA 156 | 275,000.00 |
| KA 157 | 565,000.00 |
| KA 158 | 200,000.00 |
| KA 159 | 1,503,146.00 |
| KA 161 | 190,000.00 |
| KA 162 | 450,000.00 |
| KA 163 | 140,000.00 |
| KA 164 | 260,000.00 |
| KA 165 | 340,000.00 |
| KA 166 | 387,693.98 |
| KA 167 | 350,000.00 |
| KA 168 | 360,000.00 |
| KA 169 | 1,058,000.00 |
| KA 170 | 365,000.00 |
| KA 171 | 310,000.00 |
| KA 172 | 450,000.00 |
| KA 173 | 250,000.00 |
| KA 174 | 370,000.00 |
| KA 175 | 260,000.00 |
| KA 176 | 500,000.00 |
| KA 177 | 325,000.00 |

| | |
|---|---|
| KA 178 | 310,000.00 |
| KA 179 | 450,000.00 |
| KA 180 | 400,000.00 |
| KA 181 | 460,000.00 |
| KA 182 | 450,000.00 |
| KA 183 | 590,000.00 |
| KA 184 | 305,320.00 |
| KA 185 | 300,000.00 |
| KA 186 | 260,000.00 |
| KA 187 | 325,000.00 |
| KA 188 | 260,000.00 |
| KA 189 | 310,000.00 |
| KA 190 | 260,000.00 |
| KA 191 | 400,000.00 |
| KA 192 | 450,000.00 |
| KA 193 | 219,450.00 |
| KA 194 | 369,900.00 |
| KA 195 | 140,000.00 |
| KA 196 | 260,000.00 |
| KA 197 | 260,000.00 |
| KA 198 | 250,000.00 |
| KA 199 | 290,000.00 |
| KA 200 | 200,000.00 |
| KA 201 | 260,000.00 |
| KA 202 | 660,000.00 |
| KA 203 | 360,000.00 |
| KA 204 | 50,000.00 |
| KA 205 | 210,000.00 |
| KA 206 | 500,000.00 |
| KA 207 | 220,000.00 |
| KA 208 | 437,527.86 |
| KA 209 | 605,000.00 |
| KA 210 | 680,000.00 |
| KA 211 | 867,979.27 |
| KA 212 | 160,000.00 |
| KA 213 | 300,000.00 |
| KA 214 | 290,000.00 |
| KA 216 | 260,000.00 |
| KA 217 | 240,000.00 |
| KA 218 | 310,000.00 |
| KA 219 | 200,000.00 |
| KA 220 | 200,000.00 |
| KA 221 | 510,000.00 |
| KA 222 | 1,531,000.00 |
| KA 223 | 200,000.00 |
| KA 224 | 260,000.00 |
| KA 225 | 200,000.00 |
| KA 228 | 385,000.00 |

| | |
|---|---|
| KA 229 | 265,000.00 |
| KA 232 | 150,000.00 |
| KA 233 | 300,000.00 |
| KA 234 | 125,000.00 |
| KA 235 | 450,000.00 |
| KA 236 | 225,000.00 |
| KA 237 | 250,000.00 |
| KA 238 | 200,000.00 |
| KA 239 | 350,000.00 |
| KA 240 | 50,000.00 |
| KA 241 | 150,000.00 |
| KA 242 | 150,000.00 |
| KA 243 | 250,000.00 |
| KA 244 | 150,000.00 |
| KA 245 | 50,000.00 |
| KA 246 | 318,550.00 |
| KA 248 | 170,000.00 |
| KA 249 | 150,000.00 |
| KA 250 | 225,000.00 |
| KA 251 | 160,000.00 |
| KA 252 | 235,000.00 |
| KA 253 | 160,000.00 |
| KA 254 | 150,000.00 |
| KA 255 | 185,000.00 |
| KA 256 | 161,409.22 |
| KA 257 | 115,000.00 |
| KA 258 | 100,000.00 |
| KA 259 | 160,000.00 |
| KA 260 | 260,000.00 |
| KA 261 | 220,000.00 |
| KA 263 | 50,000.00 |
| KA 264 | 1,150,000.00 |
| KA 266 | 300,000.00 |
| KA 267 | 150,000.00 |
| KA 269 | 100,000.00 |
| KA 270 | 200,000.00 |
| KA 271 | 50,000.00 |
| KA 272 | 50,000.00 |
| KA 273 | 60,350.00 |
| KA 274 | 50,000.00 |
| KA 275 | 50,000.00 |
| KA 276 | 50,000.00 |
| KA 277 | 50,000.00 |
| KA 278 | 50,000.00 |
| KA 279 | 50,000.00 |
| KA 280 | 50,000.00 |

**91,700,206.52**

# கவனிப்பு

**அச்சில் வார்த்தது போல மூன்று பொம்மைகள் மாணவர் முன் போட்டிக்கு வைக்கப்பட்டன...**

ஒரே மாதிரியான தோற்றம், ஆசான் போட்டியை அறிவித்தார்:

இந்த மூன்று பொம்மைகளில் வித்தியாசங்கள் உண்டு. கண்டு பிடிப்பவர்களுக்கு தகுந்த பரிசு உண்டு.

**மாணவர்கள் போட்டியில் இறங்கினர்...**

மூன்றிலும் மூன்று ஓட்டைகள்...

வாயில் ஒன்று.
காதுகளில் இரண்டு.
எல்லா பொம்மைகளிலும் அதே போல் ஓட்டைகள்.
எந்த வித்தயாசமும் தென்படவில்லை சோர்ந்து நின்றவர்களிடம் ஆசான் கேட்டார், வித்தியாசமே இல்லையா? இல்லை ஐயா.... மூன்றும் ஒரே மாதிரி தான் இருக்கு...!

கூரிய விழிகளுடன் கடைசிப் பெஞ்ச் கலா முன்வந்தாள்:

நான் கண்டு பிடிக்கிறேன் மாஸ்டர்...!

ஒரு ரூபாய் காசை எடுத்துக்கொண்டாள். முதல் பொம்மையின் வலது காதில் காசைப் போட்டுக் குலுக்கினாள். இடது காது வழியே வந்து விழுந்தது.

இரண்டாம் பொம்மையின் வலது காதில் அதேபோல் போட்டுக் குலுக்கினாள். வாய் வழியே வந்து விழுந்தது.

மூன்றாம் பொம்மையிலும் அதேபோல் போட்டுக் குலுக்கினாள். காசு வெளியே வரவேயில்லை. வயிற்றுக்குள் போய் விட்டது.

கலாவைப் பாராட்டிய ஆசான் கேட்டார்: இதிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

**விளக்கினாள் கலா:**

அனுபவ உரைகளை பலர் ஒரு காதால் கேட்டு இன்னொரு காதால் வெளியேற்றிவிடுவர்

**முதல் பொம்மை போல,**

கேட்ட வார்த்தைகளைப் பலர் வாய் வலிக்கப் பேசிப் பேசியே வெளியேற்றிவிடுவர்.

**இரண்டாம் பொம்மைபோல**

நல்ல உரைகளைக் காதில் வாங்கி, உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து, கிரகித்து மிகச் சிலரே செயலில் காட்டுகின்றனர்.

**மூன்றாம் பொம்மை போல**

குட்டிக்கதை வாசிக்கும் வாசகர்களைக் கேட்கிறாள் கலா:

**நீங்கள் எந்த வகைப் பொம்மை...?**

**பெரிய பெரிய வித்தியாசங்கள் எல்லாம் பெரிதாய் வெளியில் தெரிவதில்லை.**

# மறைக் கல்வி அறிவோம்



**01. இறைவனுக்கு கீழ்ப்படியாத இறைதூதர்கள் எவ்வாறு தாழ்த்தப்பட்டார்கள்?**

B இவர்கள் நரகத்தில் தள்ளப்பட்டார்கள்.

**02. நரகத்தில் தள்ளப்பட்ட இறைத்தூதர்களின் பெயர் என்ன?**

B இவர்களை **அலகை** என்றும் **தீய சக்திகள்** என்றும் அழைக்கின்றோம்

**03. இறைவனுக்கு கீழ்ப்பந்த இறைத்தூதர்களுக்கு என்ன நேர்ந்தது?**

B இவர்களுக்கு எல்லா காலங்களிலும், இறைவனைக் கண்டுகளிக்கும் விண்ணகப் பேறு கிடைத்தது.

**04. இறைத்தூதர்கள் நமக்குச் சேவை செய்வது எவ்வாறு?**

B நமக்காகப் பரிந்துரைச் செய்து மன்றாடுவதிலும்,இறைவனின் செய்தியைக் கொண்டு வருவதிலும், நம்மைப் பாதுகாப்பதிலும் அவர்கள் சேவை செய்கின்றனர்.

**05. அலகை நமக்கு இழைக்கும் பெரிய தீங்கு யாது?**

B நம்மைப் பாவத்தில் விழச் செய்வதே அது நமக்கிழைக்கும் பெரிய தீமை ஆகும்.

**அறிந்துக் கொள்வோம்......**

❋ விவிலியத்தை அதிகாரங்களாக பிரித்தவர் யார்?
**1206ம் ஸ்டீபன் லாங்கன் என்பவர்**

❋ விவிலிய வசனங்களை எண்ணிக்கையிட்டவர் யார்?
**1548 இராபட் மற்றும் ஸ்டீபன் என்பவர்கள்**

❋ பழைய நூல்கள் எப்போது எழுதப்பட்டன?
**கி.மு. 1500க்கும் கி. மு. 63க்கும் இடையில்**

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com




# விவிலியப் பகுதி



**நற்செய்தி : புனித மாற்கு அதிகாரம் – 08**

127 எத்தனை அப்பங்கள் அவர்களிடம் இருந்தன?

128 மக்களுக்கு இயேசு என்ன கட்டளை கொடுத்தார்?

129 மீதியாய் இருந்த துண்டுகளை எத்தனை கூடைகளில் அடைத்தார்கள்?

130 அங்கு இருந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை?

131 தம் சீடர்களுடன் படகேறி எங்கு சென்றார்?

132 இத்தலை முறையினருக்கு எது கொடுக்கப்பட மாட்டாது என இயேசு கூறினார்?

133 யாருடைய புளிப்பு மாவை குறித்து மிகவும் கவனமாயிருக்க வேண்டும் என்று இயேசு சொன்னார்?

134 இயேசு பார்வையற்ற ஒருவரை எந்த இடத்தில் கண்டார்?

135 பார்வையற்ற ஒருவனை இயேசு எங்கே கூட்டிச் சென்றார்?

136 இயேசு அவருடைய விழிகளில் உமிழ்ந்து என்ன கேட்டார்?

15

**கீழே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் நவம்பர் 10ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ–மெயிலுக்கு அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.


# செல்வரும் இலாசரும்

புனித லூக்கா
16:19:31



01

செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்.



02

............................................
அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். ...
............................................
............................................
............................................
............................................
............................................
............................................
............................................



03

செல்வரும் இறந்தார். ............
............................................
............................................
............................................
............................................
............................................
.......ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார்.



04

............................................
............................................
............................................
............................................
ஏனெனில் இந்தத் தீப் பிழம்பில் நான் மிகுந்த வேதனைப் படுகிறேன்" என்று உரக்கக் கூறினார்.



05

............................................
............................................
............................................
............................................
............................................
.............. இங்கே ஆறுதல் பெறுகிறார்; நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது" என்றார்.



06

............................................
............................................ எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்திற்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே' என்றார் அதற்கு ஆபிரகாம், 'மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்குஉண்டு. அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்" என்றார். அவர், அப்படியல்ல, தந்தை ஆபிரகாமே, இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள்" என்றார். .
............................................
............................................
............................................
............அவர்களிடம் போனாலும் நம்பமாட்டார்கள். என்றார்.

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI

## மாணவர் ஒளி





# உன்னோடு ஒரு நிமிடம்

## நொறுங்கிப் போகாதே நண்பா!

# உன்னை மறுக்கின்றபொழுது என்னில் நிறைகின்றாய்

ஆழ உழப்படுகின்ற நிலம் அதிகம் விளைச்சலைத் தரும். காய்ச்சலான பூமியில்தான் பலாவுக்கு சுவை அதிகம். மேட்டிலிருந்து விழுந்தால்தான் அருவிக்கு அழகு. இரண்டு கரைகளுக்குள் ஓடினால்தான் பாசன ஆறு. கருக விரும்பாத திரியில் ஒளி ஒட்டுவதில்லை. இலையுதிர்காலம் இல்லையெனில் புதிய தளிர் முளைக்க மரங்கள் தயாராவதில்லை.

ஆமைகளுக்கு ஓடு என்பது பாரமல்ல பாதுகாப்பு. அழிந்துகொண்டே இருப்பதுதான் எழுதுகோலுக்கு அழகு. மலர்கள் உதிர்வதில்லை எனில் கனிகள் பிறப்பதில்லை. கலங்காதே நண்பா! உன்னை மறுக்கின்ற போது என்னில் நிறைகின்றாய். தன்னை மறுத்தல் என்பது தன்னை உதாசீனப்படுத்துதலோ தன் சுயத்தைத் தியாகம் செய்வதோ, கிழிந்த ஆடையை உடுத்துவதோ, வறுமையில் வாழ்வதோ மகிழ்ச்சியிலிருந்து விடுபடுவதோ, இரவு முழுவதும் ஜெபிப்பதோ எப்போதும் கண்ணீர் கணவாயில் இருப்பதோ என்பதன்று. நற்செய்தியில் தன்னல மறுத்தல் என்பது நேர்மறையானது. இதைச் சரியாகப் புரிந்து கொண்டால் தன்னல மறுத்தல் நம்மைப் புனிதத்துக்கு இட்டுச் செல்லும். நற்செய்தியின் அடிப்படையில் தன்னல மறுத்தல் என்பது புனிதமானது சிலர் இதை ஆரோக்கியமற்ற மனநிலை இயற்கைக்கு மாறான நிலை என்று கருதலாம். தன்னல மறுத்தலை புனிதமானது எனக் கருத முடியாது ஏனெனில் புனிதம் என்பது இயற்கைக்கு மாறான ஒரு நிலை அன்று. புனிதம் என்பது மனித நிலைக்குத் தாழ்ந்த ஒரு நிலையும் அன்று. புனிதம் என்பது இயற்கையின் விதிகளோடு, இயைந்து வாழக்கூடிய வாழ்க்கை. ஆகவே விவிலிய அடிப்படையில் தன்னல மறுத்தல் என்பது தன்னை வெறுத்தலோ தன்னைக் கொடுமைப்படுத்தி இன்பம் காண்பதோ தன்னைச் சாட்டைக் கொண்டு அடித்தலோ, வாழ்வின் செல்வங்களை மறுத்தலோ, இவ்வுலக வாழ்வின் இன்பங்களை மறுத்தலோ, உறவுகளை வெறுத்தலோ அன்று. மாறாக, தன்னை மறுத்தல் என்பது என் மகன் இயேசுவைப் பின்பற்றுவதற்கு தடையாக இருக்கும் எல்லாவற்றையும் விட்டுவிடுவது. அவை செல்வமாய் இருக்கலாம். உறவுகளாய் இருக்கலாம். தனது சுயநலமாய் இருக்கலாம். இயேசுவுக்காகவும் இறையாட்சிக்காகவும் அவற்றை விட்டுவிடுவது! இயேசுவுக்காக எல்லாவற்றையும் விட்டுவிடத் தயாராக இருப்பது. உண்மையான தன்னல மறுத்தல் என்பது இயேசுவைப் பின்பற்றிச் செல்வதற்கு தடையாக இருக்கின்ற பொருட்கள் உறவுகள் தன்னலம் போன்ற எல்லாவற்றையும் மறுத்தலாகும். தன்னல மறுத்தல் என்பது இயேசுவைப் பின்தொடர தடையாய் இருப்பவற்றிற்கு இல்லை என்று கூறுவது. என் மகனைப் பின்தொடர உதவியாய் இருப்பவற்றிற்கு ஆம் என்று சொல்வது. ஆகவே தன்னல மறுத்தல் என் மகன் இயேசுவின் பொருட்டும், நற்செய்தி விழுமியங்களின் பொருட்டும், இறையாட்சியின் வளர்ச்சியின் பொருட்டும் வெளிப்பட வேண்டும். உண்மையில் இவையெல்லாம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு முரணானவை. இயற்கை வாழ்வுக்கு எதிரானவை எந்தன் படைப்பில் அர்த்தமற்றவை. தன்னை வெறுத்து வதைத்துக் கொள்ளும் எவரும் தன்னைத்தானே அன்பு செய்வதுமில்லை, அயலாரையும் அன்பு செய்வதுமில்லை. என் படைப்பையும் நிறைவு செய்வதில்லை. தன்னிடமிருந்து அகன்று செல்லும் எவரும் அயலாரிடமிருந்தும் அகன்று செல்கிறார். ஏன் என்னிடமிருந்தே விலகிச் செல்கிறார்! அப்படியானால் தன்னலத்தை மறுக்கச் சொல்லி விவிலியம் கூறுகிறதே என்று நீ கேட்கலாம். என்னைப் பின்பற்றும் எவரும் என் சிலுவையைத் தூக்கட்டும் (மாற் 8:34). உயிரைக் காத்துக் கொண்டால் அதை இழந்து விடுவாய் (மத் 8:34-38). தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றுவோர் தகுதியற்றோர் (மத் 10:38-39)

என்றெல்லாம் கூறுவதைத் தவறாகப் புரிந்து கொள்ளாதே நண்பா!

**தொடரும்**

# க. பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள் - 2019

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுங்கள்**

1. திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தைப் பெறும் ஒருவரில் இருந்து நீக்கப்படும் பாவங்கள் எவை?
2. உறுதிபூசுதல் என்ற சொல்லின் அர்த்தங்களை எழுதுக?
3. யாருடைய பெயரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி இயேசு தன் திருத்தூதருக்குக் கூறினார்?
4. உறுதிபூசுதலின் போது எது புதுப்பிக்கப்பட வேண்டும்?
5. ஞானப் பெற்றோர் பெற்றிருக்க வேண்டிய அருளடையாளங்கள் எவை?
6. எவ்வாறானவர்களுக்கு குருக்களால் உறுதிபூசுதல் வழங்க முடியும்?
7. திருமுழுக்கால் கிடைக்கும் அருள் வரங்கள் எவை?
8. திருமுழுக்கின் போது பூசப்படும் தைலம் எது?
9. திருமுழுக்கின் போது பயன்படுத்தப்படும் அடையாளப் பொருட்களையும் அவை குறிக்கும் அர்த்தங்களையும் எழுதுக?
10. இயேசுவின் மேலுடையைத் தொட்ட பெண்ணுக்கு இயேசு என்ன கூறினார்?
11. அருளடையாளங்களில் இரண்டு ஏன் "குணமளிக்கும் அருளடையாளங்கள்" என அழைக்கப்படுகின்றன?
12. குணமளிக்கும் அருளடையாளங்கள் எவை?
13. ஒப்புரவு அருளடையாளத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் 4 எழுதுக?
14. எவ்வாறானவர்களுக்கு நோயில்பூசுதல் வழங்கப்பட வேண்டும்?
15. கத்தோலிக்க திருமணத்தின் நோக்கங்கள் எவை?
16. கத்தோலிக்க திருமணத்திற்குரிய வயதெல்லை எத்தனை?
17. கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்டரீதியான தடைகள் எவை?
18. துறவற குழுவாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாக விளங்குபவர்கள் யார்?
19. துறவறத்தவர் எடுக்க வேண்டிய வார்த்தைப்பாடுகள் எத்தனை?
20. ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபையைச் சேர்ந்தவர்கள் செய்யும் பணிகளைக் குறிப்பிடுக?
21. துறவற சபைகளின் இருபிரிவுகளும் எவை?
22. திருக்குடும்பக் கன்னியர் சபையினரின் பணிகளைக் குறிப்பிடுக?
23. துறவற அருட்சகோதரிகளின் சபைகளது பெயர்கள் 4 எழுதுக?
24. தூய வின்சன் டி பவுல் சபை யாரால், எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
25. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் (YCS) யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
26. குருத்துவத்தின் இருவகைகளும் எவை?
27. பொதுக்குருத்துவத்தின் மூலம் கிடைக்கும் முப்பணிகளும் எவை?
28. மரியாயின் சேனைக்குரிய குறிக்கோள்கள் 3 தருக?
29. கத்தோலிக்க மறைப்பாடசாலையில் மறையாசிரியர்கள் செய்யக்கூடிய பணிகளைக் குறிப்பிடுக.
30. மரியாயின் சேனைக்குரிய பணிகள் 5 எழுதுக?
31. "நதிகள் நமது சகோதரர்களாகும்... நறுமணம் வீசும் மலர்கள் நமது சகோதரிகளாகும்" என்று கூறியவர் யார்?
32. பின்வரும் சொற்களுக்குரிய பொருள்களை எழுதுக?
    அ. ஷாமார், ஆ. அபாத், இ. நதா
33. மனிதனிடம் என்ன கூறி கடவுள் படைப்பை ஒப்படைத்தார்?
34. படைப்பைப் பாதுகாத்துப் பேணாமையால் இன்று ஏற்படும் அழிவுக்குரிய நிகழ்வுகள் 3 எழுதுக?
35. சமாதானம் பற்றிய செபத்தை முன்வைத்தவர்?
36. மன்னிப்பளித்து, மனித இதயங்களில் சமாதானத்தை உருவாக்கும் அடையாளம் எது?
37. கிறிஸ்தவ அன்புக்கு மாறுபட்ட, எதிர்நிலைப் பண்புகள் 3 எழுதுக?
38. தம் சகோதர சகோதரிகளிடம் சினம் கொள்கின்றவர், தம் சகோதரனையோ சகோதரியையோ முட்டாள் என்பவர், அறிவிலியே என்பவர், எவ்வாறான தண்டனைகளைப் பெறுவர் என இயேசு கூறியுள்ளார்?
39. ஆசீசி நகர் தூய பிரான்சிஸ் என்பவரின் செபத்தில் இருந்து உமக்குக் கிடைக்கும் படிப்பினைகள் 5 எழுதுக

# காயப்பட்ட மேய்ப்பர்!

## திருத்தந்தையைக் குறித்து புதிய நூல்...




Austen Ivereigh என்ற எழுத்தாளர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைக் குறித்து எழுதியுள்ள இரண்டாவது நூல், *காயப்பட்ட மேய்ப்பர்*, நவம்பர் 5ம் தேதி வெளியிடப்படுகிறது

**காயப்பட்ட மேய்ப்பர்: திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், கத்தோலிக்கத் திருஅவையை மனமாற்றம் பெறச் செய்வதற்கு அவரது போராட்டமும்** ("Wounded Shepherd: Pope Francis and His Struggle to Convert the Catholic Church") என்ற தலைப்பில் வெளியா-கும் இந்நூல், வத்திக்கானில் மாற்றங்களைக் கொணர்வதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்டுவரும் முயற்சிகளைப் பற்றி கூறுகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆற்றியுள்ள பணிகளை ஒரு வெற்றிக்களிப்புடன் கூறுவதற்குப் பதில், அவர் சந்தித்துவரும் போராட்டங்களைக் குறிப்பதற்கு, **காயப்பட்ட மேய்ப்பர்** என்று இந்நூலுக்கு தலைப்பு வழங்கியதாக, இந்நூலின் ஆசிரியர், *Ivereigh* அவர்கள், வத்திக்கான் செய்திக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

# நமது பூமித்தாய்!

## திருத்தந்தையின் புதிய நூல் வெளியீடு


இவ்வுலகம் நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு கொடை என்பதை மறந்து, பேராசையால், உலகத்தை அபகரிக்கும் கலாச்சாரம் ஆட்சி செய்வதால், நாம் அனைவரும் மன்னிப்பு கேட்கவேண்டியுள்ளது என்றார் திருத்தந்தை.

நம் பொதுவான இல்லமான பூமிக்கோளத்தையும், அங்கு வாழும் வறியோரையும் காப்பாற்றும் நோக்கத்-துடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட ***"இறைவா உமக்கே புகழ்"*** என்ற திருமடலையும், அமேசான் சிறப்பு ஆயர்கள் மாமன்றம் நிறைவடையும் தருணத்தையும் நினைவுறுத்தும் வகையில், சுற்றுச்சூழலை மையப்படுத்தி, திருத்தந்தை எழுதியுள்ள ஒரு புதிய நூல், அக்டோபர் 24, வியாழனன்று வெளியானது.

பூமியை ஒரு தாயாக உருவகப்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "நமது பூமித்தாய். சுற்றுச்சூழல் விடுக்கும் சவாலை ஒரு கிறிஸ்தவ கண்ணோட்டத்துடன் வாசித்தல்" (*"Our Mother Earth. A Christian reading of the challenge of the environment"*) என்ற தலைப்பில் எழுதியுள்ள இந்நூலை, வத்திக்கான் நூலகம் வெளியிட்டுள்ளது.

இந்நூலுக்கு, கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை, முதலாம் பர்த்தலோமேயு அவர்கள் வழங்கியுள்ள அணிந்துரையில், சுற்றுச்சூழல் பாதுகாப்பில், கிறிஸ்தவ ஒன்றிப்பு அவையும், கத்தோலிக்கத் திருஅவையும் இணைந்து மேற்கொண்டுவரும் முயற்சிகளை நினைவுகூர்ந்துள்ளார். மேலும், 2015ம் ஆண்டு முதல், படைப்பைப் பாதுகாக்கும் உலக செப நாளில், இவ்விரு திருஅவைகளும் இணைந்துவந்திருப்பது, படைப்பைப் பாதுகாத்து, வருங்காலத் தலைமுறைகளுக்கு வழங்கும் கரிசனையை வெளிப்படுத்துகிறது என்பதை, முதுபெரும் தந்தை, முதலாம் பார்த்தலோமேயு அவர்கள், தன் அணிந்துரையில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.




இவ்வுலகம் நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு கொடை என்பதை மறந்து, பேராசையால், உலகத்தை அபகரிக்கும் கலாச்சாரம் ஆட்சி செய்வதால், நாம் அனைவரும் மன்னிப்பு கேட்கவேண்டியுள்ளது என்று, திருத்தந்தை, இந்நூலில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

வாழ்வை அச்சுறுத்தும் பிரச்சனைகளை, வெறும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளாக மட்டும் கண்ணோக்கி, மேலோட்டமான தீர்வுகளைக் காண்பதற்குப் பதில், ஒட்டுமொத்த மனித சமுதாயமும், உள்ளார்ந்த மனமாற்றம் பெறவேண்டும் என்றும், இந்த மனமாற்றம் மன்னிப்பு வேண்டுவதில் தொடங்க வேண்டும் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்நூலில் விளக்கியுள்ளார்.

# வத்திக்கான் இரகசிய ஆவண காப்பகத்திற்கு பெயர் மாற்றம்...

வத்திக்கான் இரகசிய ஆவண காப்பகத்தில் 17ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, திருஅவை மற்றும், உலகின் வரலாற்று மற்றும், கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் மற்றும் நூல்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன

***இரகசியம்*** என்ற சொல்லாடலுக்கு வழங்கப்படும் நவீனகால விளக்கங்களால், எதிர்மறை விளைவு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கான் இரகசிய ஆவண காப்பகத்தின் பெயரை, ***அப்போஸ்தலிக்க ஆவண காப்பகம்*** என்று பெயர் மாற்றியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஐப்பசி 28, திங்களன்று, *"L'esperienza storica"* என்ற தலைப்பில், தன் சொந்த விருப்பத்தினால் வெளியிடும் *Motu proprio* என்ற அறிக்கை வழியாக, வத்திக்கான் இரகசிய ஆவண காப்பகம், தனது தனித்துவம், அமைப்புமுறை, மற்றும், தன் பணியில் எவ்வித மாற்றமுமின்றி, அது, இப்போதிலிருந்து அப்போஸ்தலிக்க காப்பகம் என்று அழைக்கப்படும் என்றார்.

***'இரகசியம்' என்ற சொல், 'தனிப்பட்ட'*** என்பதற்குப் பதில், மறைத்து வைக்கப்படும், வெளியிடப்படாத மற்றும், ஒரு சிலருக்கு மட்டுமே என்ற, முற்சார்பு எண்ணத்தை அகற்றும் நோக்கத்திலும் பாப்பிறையின் திருப்பணிக்கு இன்றியமையாத கருவியாக, திருப்பீடத்தின் ஆவண காப்பகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக, உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டவே, பெயர் மாற்றப்பட்டுள்ளது.

அறிவியல் ஆய்வுக்குச் சமமான அல்லது, ஐந்து வருட பல்கலைக்கழக பட்டயச் சான்றிதழ் பெற்றுள்ள வல்லுனர்களுக்கு, 1939ம் ஆண்டு பாப்பிறைப்பணியை நிறைவுசெய்த திருத்தந்தை 11ம் பயஸ் அவர்களின் காலம் வரையுள்ள ஆவணங்களை, ஆய்வுக்கென பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

# நம்பிக்கையின் மனிதர், சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்பவர்...!



மரியின் ஊழியர் சபை, பிளாரன்ஸ் நகருக்கருகில் செனாரியோ மலையில், 1233ம் ஆண்டில், அந்நகரின் ஏழு துணி வர்த்தகர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஏழுவரையும் திருத்தந்தை 13ம் சிங்கராயர் அவர்கள்,1888ம் ஆண்டில் புனிதர்கள் என அறிவித்தார் நம்பிக்கையின் மனிதர்களாக இருப்பது என்பது, புனித வாழ்வின் அடையாளங்களான உரையாடல், குழும வாழ்வு மற்றும், உடன்பிறந்த நிலையின் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதாகும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரியின் ஊழியர் சபை துறவியரிடம் கூறினார்.

ஐப்பசி 25, திருப்பீடத்தில் தன்னைச் சந்தித்த, மரியின் ஊழியர் சபை ஆண் துறவியருக்கு உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அச்சபையின் தோற்றம், சபையை நிறுவியவர்களின் தனிவரம், மற்றும், அச்சபையின் மறைப்பணி ஆகியவற்றை விளக்கினார். நம்பிக்கையின் மனிதர்கள், இக்காலத்தின் சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்பவர்கள் என்றும் கூறினார். 13ம் நூற்றாண்டில் பிளாரன்ஸ் நகரில், வர்த்தகம் மற்றும், தன்னார்வப் பணிகளில் ஈடுபட்டிருந்த, ஆண்கள் குழு ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை, அன்னை மரியின் வாழ்வால் தூண்டப்பட்டு நற்செய்திக்குச் சான்று பகர்ந்து வருவது குறித்து குறிப்பிட்டார்,

1. தனக்கு இயேசு பிறப்பு பற்றிய மங்களச் செய்தி அறிவிக்கப்பட்ட பின்னர், அன்னை மரியா எலிசபெத்திற்கு உதவிசெய்யச் சென்றது,
2. காணாவூர் திருமண விருந்தில், இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்ற உதவியது,
3. இயேசுவின் சிலுவையடியில் முழு விசுவாசம் மற்றும், வேதனையோடு நின்றது,
4. திருத்தூதர்களோடு செபத்தில் நிலைத்திருந்து, தூய ஆவியாருக்காகக் காத்திருந்தது ஆகிய, அன்னை மரியாவின் நான்கு முக்கிய பண்புகளால் தூண்டப்பட்டு இச்சபையினர் வாழ்ந்து வருவதைக் குறிப்பிட்டுப் பேசினார் திருத்தந்தை.

இச்சபையை ஆரம்பித்த ஏழு புனிதர்கள், மலையிலும் நகரத்திலும் வாழும் முறையைக் கற்றுக்-கொண்டவர்கள் என்றும், கடவுள் அனுபவத்தால் உறுதிப்படுத்தப்பட்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்றத் தெரிந்தவர்கள் என்றும், நற்செய்தியை அறிவிப்பதற்கு அனுப்பப்படும் புதிய தளங்களிலுள்ள மக்களின் அழகு, கலாச்சாரம் மற்றும், வியத்தகு ஆன்மீகத்தை அனுபவிக்குமாறு கேட்டுக்கொண்ட திருத்தந்தை, நம்பிக்கையின் மனிதர் களாக வாழ்வது எப்படி என்பதையும் விளக்கினார்.

இக்காலத்தின் சமூகத்தொடர்பு சாதனங்கள், நேர்மறை செய்திகளைத் தருகின்றன, அதேநேரம், மக்களின் மாண்பை அழிக்கின்றன, ஆன்மீகத்தை பலவீனப்படுத்துகின்றன, மற்றும், உடன்பிறந்த உணர்வுகொண்ட வாழ்வைச் சிதைக்கின்றன, எனவே, இக்கருவிகளை நற்செய்தி அறிவிப்பிற்கென பயன்படுத்துகையில், ஒருவர் நன்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும். இப்பொதுப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பல்வகை கலாச்சாரம் பற்றியும் திருத்தந்தை குறிப்பிட்டார்.

மரியின் ஊழியர் சபை குழுமங்கள், உலகளாவிய உடன் பிறந்த நிலையின் அடையாளங்களாக, வரவேற்கும் மற்றும், ஒருங்கிணைக்கும் பள்ளிகளாக, திறந்தமனம் மற்றும் உறவுகளை வளர்க்கும் இடங்களாக அமையட்டும். இத்தகைய சாட்சிய வாழ்வு, பிரிவினைகளையும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற முற்சார்பெண்ணங்களையும், இன, கலாச்சார, மொழி ஆகிய பிரிவினைச் சுவர்களையும் விலக்கி நிற்க உதவுவதாக என்ற தன் ஆவலை தெரிவித்தார்.



# மன்னார் மறைசாட்சிகள்

## மானிடவியல் 03

## கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

### மன்னார் மாதோட்ட வரலாறு

இதற்கான தொல்பொருள் சாட்சியம் சீனா தேசத்தில் மாகோ மாநிலத்தில் ஒரு தொல்பொருள் காட்சியகத்தில் தான் நேரடியாக கண்டதாக ஆய்வாளர் ஜெகநாதன் கருத்து வெளியிட்டுள்ளார். மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் மன்னார்த் தீவிலும் மாதோட்டத்திலும் தொடக்க காலத்திலிருந்தே வசித்து வருபவர்கள் குருகுல நாகர்களாகும் என எடுத்துக் கூறுகின்றன. (கமலநாதன்: 2005:61)

### 1.2.1 குருகுல பரதகுல வரலாறு

கரையார், பரவர், ஆகியோர் மன்னார் வேதசாட்சிகளுடன் அதிகமாக இணைத்துப் பேசப்படுவதால் இச்சந்ததியினர் பற்றிய தேடல் இவ்வாய்வு நூலுக்கு அவசியம் தேவைப்பட்டது. இதன் அடிப்படையில் இச்சந்ததியினர் பற்றிய ஆய்வு இங்கே தரப்படுகின்றது. குருகுலத்தவர்களும், பரத குலத்தவர்களும் ஈழ மக்கள் என வம்சரீதியாகவும் மொழி ரீதியாகவும் அழைக்கப்பட்டனர். கௌரவர் என்ற சொல்லுக்கு குருகுல வேந்தர் (Descendant of the Kuru Dynasty) என்பது தமிழ் சொல்லாகும். குருகுலம், பரதகுலம் என்ற பெயர்கள் முற்கால திராவிட வேரிலிருந்து வருகின்றது. (Proto- Dravidan root) கௌரவர்களைக் குரு மக்கள் (Priest – people) அதாவது குருகுலத்தார் எனவும் அழைப்பர் இவர்கள் குருகுலத் திராவிடரே ஆகும். முற்கால இந்திய சமூகத்தில் குருகுலத்த-வர்கள் சட்டவல் லுனர்-களாக (Scribes) குருக்களாக (Priests) ஆசிரியர்களாக (Teachers) ஆட்சியாளர்களாக (Rulers) விளங்கினர். (Xavier. T.J: “The Land of letters”: 1977: 8-9)

முற்கால பரதவர்கள் குருகுல ஆட்சியாளர்களின் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டனர். இவர்கள் நாக வம்சத்தின் ஒரு பகுதியினர் என்றும் கொள்ளப்படுகின்றனர். இக்குருகுல பரதகுல மக்கள் சிந்து நதிப் பள்ளத்தாக்கிலிருந்து இடம் பெயர்ந்து தென்னிந்தியாவில் குடியேறி பின்னர் இலங்கையில் குடியேறினர். (Xavier. J.T: The Land of letters: 1977: 11) இவர்கள் இந்தியாவில் வடமேற்குப் பகுதியில் பல குலங்களாக பிரிந்திருந்தனர். அவர்கள் நாகர், குருகுல, பரதகுலம், மீனவர், காண்டவர் ஆகும். முற்கால சிந்து நாகரீக மக்களான குரு ஆட்சியாளர்கள் (Priests – Rulers) அல்லது நாகர் இரு குலங்களாக பிரிந்திருந்தனர். ஒன்று ரகு குலம் மற்றையது கேது (Ketu) குலமாகும். கேது என்பது குரு என உச்சரிக்கப்பட வேண்டுமென சேவியர் என்னும் மொழியியல் ஆய்வாளர் கூறுகின்றார். குரு, நாகர் குலத்தவர்கள் மாதோட்டத்தில் அமைந்துள்ள புரதான திருக்கேதீஸ்வர கோவிலை கட்டி தங்களுடைய கடவுளாகிய சிவனை வணங்கினர்.

குருகுலத்தவர்களதும் பரதகுலத்தவர்களதும் தனிப்பட்ட பெயர்கள், நம்பிக்கைகள், சின்னங்கள் என்பன ஆரியருக்கு முற்பட்ட உற்பத்தி ஸ்தானம் எனக் கொள்ளப்பட வேண்டும். (Xavier. J.T: The Land of letters: 1977: 30) கௌரவர்கள் என்னும் குருகுலத்தவர்கள் பரதவருடைய அரச பரம்பரையினர். (Sivaratnam: 1978: 44). கரையார் என்பது கடற்கரை என்ற பதத்திலிருந்து வந்ததல்ல மாறாக கௌரவரின் திரிவுபட்ட பெயராகும். (Raghavan : 1961: 4). ஆரியருடைய சாதி அடிப்படையில் கரையாரும் பரவரும் சத்திரியர்களாகும். (Gnanapragasar : 1924 : 11). யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் வரலாற்றுத்துறை பேராசிரியர் சிற்றம்பலம், பரதவர் நாடு முழுவதும் பரந்து காணப்பட்டனர். (சிற்றம்பலம் : 1992: 12) ஈழத்தின் பல பகுதிகளிலும் பரதர் வாழ்ந்தனர். பரதர்கள் நயினாதீவு கடற்கரையோரத்தில் வாழ்ந்ததால் கரையார் எனப்பட்டனர் ( சிற்றம்பலம் : 1992: 2 - 25) என்கிறார். குருகுல மேன்மக்கள் **கரையார்** எனப் பொதுப் பெயரிலடக்கிச் சொல்லப்படினும் செம்படவர் நுழைஞர் போன்ற மீன்பிடிப்போருடன் சமப்படுத்தி நோக்கப்படக்கூடாத நாட்டாண்மைக் காரரேயாகும். (வேலுப்பிள்ளை : 1918: 177-178) நாட்டாமைக்காரர் என்பது நாட்டை ஆண்டவர்கள் எனப் பொருள்படும். இக்குருகுல மேன்மக்கள் முத்தமிழரசர் காலத்தே பிரதானிகளாக விளங்கினவர்களாகும். (வேலுப்பிள்ளை :1918: 177) மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த (பெரியநாவற்குளம்) எதிர்மனசிங்க முதலியார் சல்வதோர் சூசைப்பிள்ளை, திருகோணமலை நொத்தாரிசு வருணகுலசிங்க முதலியார் ஆகியோர் யாழ்ப்பாணத்திலுள்ள வண்ணார்பண்ணை, கொக்குவில், கோண்டவில் முதலிய இடங்களில் தமிழரசர்கள் காலத்தே பிரதானிகளாய் வாழ்ந்தவர்களின் நெருங்கிய சுற்றத்தவர்களாகும். இவர்கள் கொடி, குடை, ஆலவட்டம், தலைப்பற்று (பாகை), நாதசின்னம் தவில, தாளம் போன்றவற்றிற்கு உரித்துடையவர்களாகும். குடிமக்களும் இவர்களுக்கு இருந்தனர். (யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன் : 1891 ஆடி மாதம் 4வது சனிக்கிழமை)

தொடரும்.....

# உலகிலுள்ள எல்லா ஆலயங்களுக்கும் தாய் ! இலாத்தரன் பேராலயம்.




நீரோ மன்னன் நாட்டை ஆண்டு வந்த காலத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யார் யாரென்று நிச்சயமாக யாருக்கும் தெரியாது. மன்னன் பிளவுத்துஸ் லாத்திரனுஸ் என்பவரை சந்தேகிக்க லானான். அவரை சாவுக்குத் தீர்ப்பிட்டான். அல்லது சொத்தைப் பறித்துக்கொண்டான். 312 ஆம் ஆண்டில் கொன்சான்தின் என்னும் பேரரசர் அந்த இடத்தில் ஓர் ஆலயம் அமைத்தார். இயேசுவுக்கு அதை அர்ப்பணம் செய்தார். (904 -911) திருச்சபையை ஆண்டு வந்த 3ஆம் செர்ஜியுஸ் என்னும் பாப்பானவர் அந்தக் கோயிலைத் திரும்பக் கட்டி இரட்சகருடைய பெயருடன், புனித ஸ்நாபக அருளப்பர் நற்செய்தியாளரான புனித அருளப்பர் இவர்களது பெயர்களையும் சேர்த்துக்கொண்டார். உரோமையிலுள்ள கோயில்கள் அனைத்திற்கும் இது தாய் கோயிலாக இருந்தது.

இலாத்தரன் பேராலயத்தின் சில சிறப்பம்சங்கள்

1. புனித பேதுரு உரோமையில் இருந்தபோது அவர் திருப்பலி நிறைவேற்றிய மரப்பீடம் இலாத்தரன் பேராலயத்தின் பிரதானப் பீடத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.

2. இங்கே வைக்கப்பட்டுள்ள பித்தளையால் ஆனக் கடைசி இராவுணவு சித்தரிப்பின் பின்னால் இயேசு இராவுணவு கொண்டாடிய அசல் மேசையின் ஒரு பகுதி உள்ளதாக நம்பப்படுகிறது.

3. இலாத்தரன் பேராலயத்தின் அருகேதான் Holy Stairs என்று சொல்லப்படும் புனிதப் படிக்கட்டுகள் இவை இன்றும் கான்ஸ்டடைன் மன்னனின் தாய் புனித ஹெலனா இதை உரோமைக்குக்கொண்டு வந்தார் என்றும் பாரம்பரியம் சொல்லுகிறது. பளிங்காலான 28 படிக்கட்டுகள் இதில் உள்ளன. திருப்பயணிகள் இதில் இயேசுவின் பாடுகளைத் தியானித்தவாறு மண்டியிட்டுச் செல்வது வழக்கம்.

4. ஒரு புதிய திருத்தந்தையின் பதவியேற்பு நிகழ்வு இலாத்தரன் பேராலயத் தில்தான் நடைப்பெறும். அதுதான் திருத்தந் தையின் கோயில். அங்கிருந்துதான் அவர் ஓட்டுமொத்தத் திருச்சபையையும் பொறுப்பேற்கிறார்.



5. இலாத்திரன் கோயிலிலுள்ள ஒரு கதவிற்கு புனித கதவு என்று பெயர். அது எப்பொழுதும் அடைப்பட்டே இருக்கும். உள்பக்கமாக பூட்டப்பட்டு யாரும் திறக்க முடியாதபடி இருக்கும். அந்த கதவை ஜுபிலி ஆண்டில் மட்டும்திருத்தந்தை திறந்து வைப்பார்.

நமது உடலும் பரிசுத்தமான தூ ய ஆவியார் தங்கும் ஆலயம் (1கொரி 3:16) அந்த உடலைப் புனிதமாக பேணுவதும் கறைப்படுத்துவதும் மனித சிந்தனையிலுள்ளது. சிந்தனை தூயதென்றால் உடலும் தூயதே.

உங்கள் உடலால் கடவுளுக்கும் பெருமை சேருங்கள் என்று புனித பவுல் கூறுவதை மனதிலிருத்துவோம். (1கொரி 6:20)

**J. ஜெயபால் பர்னாந்து**
**புனித செபஸ்தியார் சபை**
**கொச்சிக்கடை கொழும்பு 13.**

# புனித மலாக்கி

## இம்மாத புனிதர்



1096ஆம் ஆண்டு அயர்லாந்தின் அர்மார்க் நகரில் பிறந்த மலாக்கி, தனது பள்ளிக் கல்வியை முடித்த பின் 1122 ஆம் ஆண்டு, அருள்பணியாளராகவும், 1125ஆம் ஆண்டு கொனார் (Conor) நகரின் ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார். அதன் பிறகு மீண்டும் 1129ஆம் ஆண்டு அர்மாக் நகருக்கு பேராயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், பேராயர் பதவியில் பல எதிர்ப்புகளையும், இன்னல்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. தனது பணியைச் சரியாகச் செய்ய இயலாததால் 1138 ஆம் ஆண்டு தன் பதவியைத் துறந்து உரோம் நகருக்குத் திருப்பயணியாக பயணம் மேற்கொள்ள விரும்பினார். அவ்வாறு செல்லும் வழியில் பிரான்ஸ் நாட்டின் கிளெயர்வாக்ஸ் (Clairvaux) என்ற இடத்தில் சிஸ்டர்சியன் துறவு சபையைச் சார்ந்த புனித பெர்னார்டு என்பவரைச் சந்தித்தார். அங்கேயே ஒரு துறவியாகத் தங்கிவிட ஆவல் கொண்டாலும், புனித பெர்னார்டின் ஆலோசனையைக் கேட்டு தன் சொந்த நாடான அயர்லாந்திற்கே திரும்பினார்.

அங்கு மெல்லி·.போன்ட் (Melifont) துறவு இல்லத்தைக் கட்டியதொடு, அயர்லாந்திற்கான திருத்தந்தையின் பிரதிநிதியாகவும் செயல்பட்டார். மீண்டும் பிரான்சின் கிளெயர்வாக்கில் புனித பெர்னார்டைச் சந்திக்க வந்தபோது, நவம்பர் 2, 1148 அன்று அப்புனிதரின் கைகளிலேயே தன் உயிரை விடார்.

இவர் உடலை கைகளில் தாங்கிய புனித பெர்னார்டு, இவர்உண்மையிலேயே ஒரு புனிதர் என அறிக்கையிடடார். இதையே 1190 ஆம் அண்டு திருத்தந்தை மூன்றாம் கிளமெண்ட் அதிகாரப்பூர்வமாக திருஅவையில் அறிவித்தார்.

புனித மலாக்கி தான்வாழ்ந்த காலத்தில் நிறைய புதுமைகளை ஆற்றியுள்ளார். எண்ணற்ற நிகழ்வுகளை அவர் முன்னறிவித்துள்ளார். அதில் திருத்தந்தையர்களைக் குறித்தவை ஏராளம். 1138இல் உரோமை சென்றபோது திருத்தந்தை 2ஆம் இன்னசென்டைச் சந்தித்து, அவருடன் தங்கியிருந்த காலத்தில் இறைருளால் எதிர்காலத் திருத்தந்தைகளைப் பற்றித் திருக்காட்சிக் கண்டார். இக்காட்சிகளின் அடிப்படையில் அன்றிலிருந்து இதுவரை திரு அவையை ஆண்டு வந்த 12 திருத்தந்தையர்களைப் பற்றி சுருக்கமா இலத்தீன் சொற்றொடர்களில் விவரித்துள்ளார். திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன்பால் ( 111*) வரை மலாக்கியின் தீர்க்கதரிசனம் முற்றிலும் பொருத்தமாக நிறைவேறியது.

திருத்தந்தை பிரான்சிஸ் (112) Peter the Roman என மலாக்கியால்குறிப்பிடப்படுகிறார். இவர்தான் மலாக்கியின் திருத்தந்தையர் பட்டியலில் கடைசியில் இடம்பெறுபவர். இவர் தான் பாத்திமா அன்னையின் (ஜுன் 13.1929) வேண்டுகோளுக்கு இணங்கி மிகவும் தாமதமாக ரஷ்யாவை மரியாவின் மாசற்ற இருதயத்துக்கு அர்ப்பணிபார் என்று உரோம் நகரைச் சேர்ந்த Antonio Ruffini (இயேசுவின் திருக்காய வரம் பெற்றவர்) முன்னறிவித்தார்.

'அர்ப்பணம் தாமதமாவதால் ரஷ்யா தன் தவறானக் கொள்கைகளை உலகம்முழுவதும் பரப்பிவிட்டது. போர்களும், திருஅவையில் கலாபனைகளும் ஏற்பட்டு நல்லவர்கள் கொல்லப்படுகின்றனர். திருத்தந்தை அதிக துன்பம் அனுபவிக்க நேரிடும். பல நாடுகள் இல்லாமல் அழிக்கப்படும். ஆனால் இறுதியில் மரியாவின் மாசற்ற இருதயம் வெற்றிபெறும். திருத்தந்தை ரஷ்யாவை மரியாவின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுப்பார். ரஷ்யா மனந்திரும்பும். உலகிற்கு ஒரு சமாதானக் காலம் அருளப்படும். போத்துக்கல்லில் விசுவாசம் எப்போதும் காப்பாற்றம்படும். (பாத்தியமா அன்னையின் செய்தி ஜுலை 13.1917)

# சேவை பற்றிய பொன் மொழிகள்



☺ வாழ்க்கையின் நோக்கம் மகிழ்ச்சியாக இருப்பது அல்ல மாறாக பயனுடையவர்களாக இருத்தல்

மதிப்பு மிக்கவர்களாக இருத்தல் அல்ல பரிவுள்ளவராக இருத்தல்

நீங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்தீர்கள் என்ற மனநிறைவுடன் இருத்தல்

☺ பிறரின் சுமைகளை குறைக்கிற எவருமே எப்போதுமே பயனற்றவர்கள் அல்ல.




☺ உனக்குத் திருப்பித் தர முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு நீ ஏதாவது உதவி செய்யாதவரை இன்று நீ வாழவே இல்லை.

☺ உதவி செய்யும் இதயம் உடையவரே குறை கூறவும் தகுதியுடையவர்.

☺ பிறருடைய வாழ்வை அழகாக்குபவர்களின் வாழ்வு எப்போதுமே அழகானதுதான்.

☺ பிறர் நலச் சேவையில் உன்னைக்



கரைத்துக் கொள்வதே, உன்னுடைய அடையாளத்தை நீ கண்டடைவதற்கான சிறந்த வழியாகும்.

☺ இவ்வுலகில் நீ வாழ்வதற்கான வாடகையைச் செலுத்த சிறந்த வழி பிறருக்குச் சேவை செய்வதேயாகும்.

# இஞ்சி துவையல் சாப்பிடுங்க....!

## ஜீரண சக்தி அதிகரிக்க....

## இரத்த நாளங்களின் செயல்பாட்டை மேம்படுத்தி மாரடைப்பு நேராமல் இஞ்சி தடுக்கிறது...!



தலைவலியைப் போக்கி இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது. கொழுப்புச் சத்தைக் குறைத்து, மைய நரம்பு மண்டலத்தைத் தூண்டி இருதய, சுவாசத் தசைகள் சீராக இயங்க உதவுகிறது. மலச்சிக்கல் ஏற்படுவதைத் தடுத்து செரித்தலைச் சீராக்கி வயிற்றுவலி ஏற்படுவதைத் தடுக்கிறது. சுவையான இஞ்சி துவையல் எப்படி செய்வது என்பதைப் பார்க்கலாமா?

***தேவையானவை:***

இஞ்சி - சிறிய துண்டு, தேங்காய் துருவல் - அரை கப், காய்ந்த மிளகாய் - 3, புளி - சிறிதளவு, உளுத்தம் பருப்பு - ஒரு டேபிள் ஸ்பூன், கடுகு - கால் டீஸ்பூன், கறிவேப்பிலை -சிறிதளவு, எண்ணெய், உப்பு - தேவையான அளவு.

***செய்முறை:***

இஞ்சியை சுத்தம் செய்து நறுக்கிக் கொள்ளவும். வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு காய்ந்த மிளகாய், தேங்காய் துருவல், உளுத்தம்பருப்பு, இஞ்சி ஆகியவற்றை சேர்த்து வறுக்கவும். இதனுடன் புளி, உப்பு, சிறிதளவு நீர் சேர்த்து மிக்சியில் அரைக்கவும்.

பின்னர் வாணலியில் சிறிதளவு எண்ணெய் விட்டு சூடானதும், கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து தாளித்து, அரைத்த கலவையை சேர்த்து வதக்கினால் சுவையான இஞ்சி துவையல் தயார். இதை மூன்று, நாட்களுக்கு வைத்திருந்து பயன்படுத்தலாம்

# ஒரு கப் இஞ்சி டீ உங்கள் காலையை உற்சாகமாக மாற்றி விடும்... !

ஒரு தம்ளர் இஞ்சி டீயில் ஏகப்பட்ட நன்மைகள் அடங்கியுள்ளன. எனவே இனி தினசரி காலையில் தவறாமல் காபி, டீக்கு பதிலாக இஞ்சி டீ குடித்து வரலாம்.


ஒரு கப் இஞ்சி டீ உங்கள் காலையை உற்சாகமாக மாற்றி விடும் வல்லமை கொண்டது. இந்த இஞ்சி டீயில் ப்ளே வர்ஸ், நறுமணம் எல்லாம் அடங்கியுள்ளது. உங்களுக்கு சுவையும் பிடித்தமானதாக இருக்கும் . எனவே காலைப் பொழுதை ஒரு கப் இ ஞ்சி டீ உடன் தொடங்குங்கள்.

இஞ்சி டீயில் வைட்டமின் சி , பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் இரும்புச் சத்து என ஏராளமான சத்துக்கள் உள்ளன. இது உடல் எடையை மட்டும் குறைப்பதோடு நன்மைகளையும் நமக்குத் தருகிறது. உடல் எடை இழப்பு உடல் எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு இஞ்சி ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். இது நமது உடலில் உள்ள இரத்தத்தில் சர்க்கரை அளவையும் கட்டுப்பாட்டில் வைக்கிறது. இது பசியை போக்கி வயிறு நிரம்பிய எண்ணத்தைக் கொடுக்கிறது. இதனால் உடல் பருமன் வராமல் தடுக்கப்படுகிறது.

செரிமானத்தைத் தூ ண்டி செரிமான கோளாறுகளைச் சீர்செய்யும் அற்புதமான மருந்து இஞ்சி என்பதில் மாற்றுக் கருத்தில்லை. செரிமானக் கோளாறுகள் தொடர்ந்து இருந்தால் அதற்கு இஞ்சி டீ சிறந்த நிவாரணம் அளிக்கும். வயிறு மந்தம், வீக்கம் போன்ற வயிறு சம்பந்தமான பிரச்சினைகளைக் குறைக்கிறது. அதனால் காலையில் எழுந்ததும் ஒரு தம்ளர் இஞ்சி டீ குடித்தால் அன்றைய தினம் முழுவதும் உங்களுடைய செரிமான உறுப்புகள் நன்றாக செயல்பட ஆரம்பிக்கும். எடுத்துக் கொள்ளும் உணவில் இருக்கும் ஊட்டச்சத்துக்களைக் குடல் உறிஞ்சிக் கொள்ளவும் உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்தல் இஞ்சி டீயில் உள்ள வைட்டமின் சி மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்கள் நமது நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத் துகிறது. எளிதில் நோய்க்கிருமிகள் நம்மை தாக்காமல் எதிர்த்து போராட இது உதவுகிறது. இயல்பாகவே நோய் எதிர்ப்புத்தன்மையை அதிகரித்து கொடுப்பதால் எப்போதும் ஆரோக்கியம் என்பதும் உறுதியாகிறது. இஞ்சியில் உள்ள அழற்சி எதிர்ப்பு தன்மை நமக்கு ஏற்படும் அழற்சி, அழற்சியால் ஏற்படும் வலி போன்றவற்றை எதிர்த்து போரிடுகிறது.


## 01 ஜனாதிபதி தேர்தல்....



மேதகு. J. D. அந்தனி ஜெயக்கொடி ஆண்டகை செயலர். இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்




மேதகு. J. வியானி பர்னாந்து ஆண்டகை
கண்டி மறைமாவட்ட ஆயர்




மேதகு. நோர்பட் M அந்திராடி (O.M.I) ஆண்டகை
அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர்




மேதகு. ரேமன் K. விக்ரமசிங்க ஆண்டகை
காலி மறைமாவட்ட ஆயர்




மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகை. மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்




மேதகு. மெக்ஸ்வல் G. சில்வா ஆண்டகை. கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்



அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை. கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்




மேதகு. ஹெரல்ட் A. பெரேரா ஆண்டகை
குருநாகல் மறைமாவட்ட ஆயர்




மேதகு. D. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை
சிலாபம் மறைமாவட்ட ஆயர்



மேதகு. கிளீட்டஸ் C. பெரேரா (O.S.B) ஆண்டகை
இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர்



மேதகு. F. L. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை
மன்னார் மறைமாவட்ட ஆயர்



மேதகு நோயல் C. இம்மானுவேல் ஆண்டகை
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

**2019 ஐப்பசி 23**

## 01 இறைஊழியர்...

மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயற்திட்டங்களும் பூர்த்தியாகி விட்டன. ஆயினும் அவரின் நடுநிலை வகிப்புடன் சக்திவாய்ந்த வலுவான புதுமைகள் தேவைப்படுகின்றன. நீங்கள் அனைவருமே இதற்காக செபிக்க வேண்டும். தொழிலுக்காக, பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன என்பதைவிட, உதாரணமாக ஒருவர் இறந்துவிட்டதாக வைத்தியர்கள் கூறியபின்பு அவர் உயிர்பெற்ற அனுபவம், வைத்தியர்களால் கைவிடப்பட்ட தீராத நோய் குணமாகியது போன்ற வலுவான புதுமைகள் உங்கள் குடும்பங்களிலோ, அறிந்தவர்களிடையேயோ நிகழ்ந்தால் அவற்றை உடனடியாக எமக்கு எழுதி அனுப்புங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார்!!

திருப்பலியின் நிறைவில் சித்திரப்போட்டிக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

## 01 தமிழ் கத்தோலிக்க...

எமது கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் போஷகருமான அருட்பணி நாகரட்ணம் மனோகுமாரன் அடிகளாரும் அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

## 01 இறைவனின்

கடமைக்காக அனுசரிப்பதும் அனுசரிக்காவிட்டால் சாவான பாவம் என்பது கிறிஸ்தவ வாழ்வு அல்ல. இறைவனை ஆழமாக விசுவசித்து வாழ்வின் ஒவ்வொரு கணமும் இறைவனின் விருப்பப்படி வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வாகும். இறைவனின் மூச்சுக் காற்று எமது வாழ்வில் உள்ளது. அதனால் எமது மனித வாழ்வின் பெறுமதியை உணர்ந்துக்கொள்ள முடியுமல்லவா? இவ்வுலகில் வாழும் எம் ஒவ்வொருவரைப் பற்றியும் இறைவனுக்கு ஒரு திட்டம் உண்டு. எமது மனித கண்களுக்கு புலப்படாத அந்த திட்டத்தை அறிந்து நாம் வாழ்வதுடன், மற்றவர்களின் வாழ்வை வளமாக்க உதவி செய்ய வேண்டும்.

துணை ஆயர்களால் மாலை ஆராதனை நடத்தப்பட்டது. குருமுதல்வர் குயின்டஸ் அடிகளாருடன் கம்பஹா பங்குத்தந்தை அருட்தந்தை பீலிக்ஸ் சாந்த அடிளார் உட்பட, பங்கு மக்கள், திருத்தல பரிபாலகர் ஜுட் சமன் அடிகளாரும் இணைந்து சிறப்பித்தனர்.

**தகவல் : திரு. சுனில்**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com

## 02 மாம்புரி புனித...

(அவரை காக்கைப் பேதுரு எனவும் அழைப்பார்கள்). அவர் தம் உறவினர்களோடு வாழ்ந்து வந்தார். எளிமையும் இறைபக்தியும் தம் வீட்டை அண்டி வருவோர்க்கு உபசரித்து வந்தவர். அதனாலேயே அவரை காக்கைப் பேதுரு என அழைத்தனராம்.

பேதுருவின் மாமியார் கிறிஸ்டினா இவர் கைம்பெண் இறைப்பக்தி கொண்டவன் கணவனை இழந்தாலும் ஒழுக்கத்தில் தூயவளாக இருந்தாள் இறைவன் தமக்கென ஒரு வாசஸ்தலம் ஒன்றை அமைப்பதற்கு எம் தாய் மரியாளின் சுரூபத்தை கடலில் மிதக்கச் செய்ய சித்தம் கொண்டார். கிறிஸ்டினா நாள்தோறும் தன் விவசாயத்திற்கு பசளை சேகரிக்க செல்வது வழக்கம். கடலோரங்களில் மாடுகள் கூட்டம் கூட்டமாக மேயும் மாட்டின் சாணத்தை சேகரித்து பயிர்களுக்கு பசளையாக இடுவது அக்கால பசளை முறைகளில் ஒன்றாகும். எனவே கிறிஸ்டினா அவ்வாறே தம் கடகப் பெட்டியுடன் சாணத்தை நிரப்பிக் கொள்வதற்காக கடற்கரையை நோக்கிச் சென்றிருந்தாள். கடகத்தில் சாணத்தை நிறைத்துவிட்டு சோழக்காற்று அடித்ததால் அம்பர் மற்றும் வேறு பொருட்கள் கிடைக்கும் என்று நினைத்து கடலோரம் சென்றாள். அங்கே மக்கள் கடவுக்குள் இறங்கி ஏதோ எடுக்க முற்படுகின்றனர் என நினைத்து தானும் உற்று நோக்கினாள். மாதாவின் சுரூபம் கடலில் மிதப்பதைக் கண்டாள். எல்லோரும் அதை எடுக்க முயன்றனர். முடியவில்லை. கிறிஸ்டினா தன் கடகப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு விரைந்து வீடுசென்றாள் குளித்துவிட்டு கம்யாம் அணிந்துகொண்டு (முந்தைய பெண்கள் அணிந்த சேலை) கடலை நோக்கிச் சென்றாள். தன் கம்பாயத்தின் முந்தாணையை இருகரங்களாலும் விரித்துப்பிடிக்க மாதாவின் திருச்சுரூபம் கிறிஸ்டினாவின் சேலை முந்தாணையில் வந்து தங்கியது. உறவினர் அனைவரும் சேர்ந்து ஒரு கொட்டில் அமைத்து வணங்கிவந்தனர். எங்கள் முன்னோர்களான குழந்தையில்லாத தம்பதியினர் தங்கள் பல ஏக்கர் காணியை மாதாவின் தேவாலயம் அமைப்பதற்கு தானமாக கொடுத்தனர். எங்கள் முன்னோர்கள், உறவினர்கள், ஊர்மக்கள் அனைவரும் ஆலயத்தை கட்டுவதற்கு உறவினர் 125வது ஆண்டிலே தேவலாயம் உருவாக உழைத்த அனைவரையும் நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

யூபிலி விழாவை முன்னிட்டு பங்குத் தந்தையின் அனுமதியிடன் யாழ் அமல மரித்தியாகிகளான அருட்பணியாளர்களினால் 25.08.2019 தினத்தன்று மகாஞானொடுக்கம் எம்பங்கிலே முன்னெடுக்கப்பட்டது. நற்கருணைப்பவனி, தினமும் திருப்பலி, அன்பிய விருந்து, இளையோர், முதியோர் கருத்தமர்வு, விவிலிய மற்றும் போதை ஒழிப்பு கருத்தமர்வு இன்னும் குடும்பத்தரிசிப்பு இன்னும் பல நற்செயல்களைச் செய்து இவற்றின் ஊடாக பங்கு மக்களை ஆன்ம ஆயத்தத்திற்கு உட்படுத்தினர். யூபிலி விழாவிற்கு ஆயத்தமாக 27.09.2019 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் நவநாள் ஆரம்பமானது. நவநாள் திருப்பலியை அ.ம.தி அருட்பணியாளர்கள் நிறைவேற்றினர். 05.10.2019 சனிக்கிழமை ஞானொடுக்கத்தின் நினைவுச் சிலுவையும் நடப்பட்டு எவ்வித இடையூறும் இன்றி இறைவன் வழிநடத்தியமைக்காக நன்றிப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

முன்னைய காலங்களில் அ.ம.தி அருட்பணியாளர்கள். எம்பங்கில் பணியாற்றியதாக எம் முன்னோர் கூறக்கேட்டோம். 125வது யூபிலி விழாவிலும் அவர்கள் கலந்து கொண்டதையிட்டு மகிழ்ச்சிகொள்கின்றோம். அத்துடன் 06.10.2019 அன்று சிலாப மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையினால் புணர்நிர்மானம் செய்யப்பட்ட ஆலயம் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருவிழா திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

“ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அன்னையின் புகழ் ஓங்குக”

**S. பிரகாசியா, மரியாயின் சேனை சகோதரி,**
**மாம்புரி புனித செபமாலை மாதா ஆலயம், மாம்புரி**

## 10 விவிலிய வினா விடை

127. 7 அப்பங்கள் (8:5)
128 தரையில் அமர (8:6)
129 ஏழு கூடைகள் (8:8)
130 நாலாயிரம் பேர் (8:9)
131 தல்மனுத்தா-வுக்கு (8:10)
132 அடையாளம் (8:12)
133 பரிசேயர், ஏரோதியர் (8:15)
134 பெத்சாய்தா (8:22)
135 ஊருக்கு வேளியே (8:23)
136 ஏதாவது தெரிகிறதா? (8:23)



## மணமகன் தேவை

1991இல் பிறந்த வங்கியில் கடமையாற்றும் மகளுக்கு தொழில்புரியும், இறைப்பற்றுள்ள, நற்பண்புடைய வரனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
r.p.fernandopulle@gmail.com (39032)

**மேலதிக தொடர்புகளுக்கு : 070-2054404**



## அருள்வாக்கு 2020

**நாளாந்த விவிலிய நாட்குறிப்புடன் கூடிய ‘அருள்வாக்கு 2020’ தற்போது பெற்றுக்கொள்ள முடியும்.**

**மேலதிக சிறு விநியோக செலவுடன் வீட்டிற்கே பெற்றுக்கொள்ள முடியும்.**

**மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விலைக்கழிவுடன் கூடிய விநியோகம்.**

**தொடர்பு - 0764147711** (38989)

## ஒரு குட்டிக் கதை!

**குளிர் நிரம்பிய பொழுதொன்றில் காலணிகள் கடையின் ஜன்னல் வழியே ஏக்கத்துடன் காலணிகளைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவனின் தோளில் கரமொன்று படிந்தது.**

**புன்னகை முகத்துடன் பெண்மணி ஒருவர், ‘என்ன பார்க்கிறாய்’ என்று கேட்டார்.**

**‘எனக்கு ஒரு ஜோடி காலணிகள் தருமாறு கடவுளைக் கேட்டுக் கொண்டிருந்தேன்’.**

**சிறுவனை உள்ளே தூக்கிச் சென்ற பெண்மணி, புழுதி படிந்த அவனுடைய பிஞ்சுப் பாதங்களைக் கழுவி, பொருத்தமான காலுறைகளையும், காலணிகளையும் தேர்ந்தெடுத்து அணிவித்தார்.**

**தான்தான் கடை உரிமையாளர் என்பதை சிறுவன் யூகித்திருப்பான் என்று நம்பி, ‘நான் யார் தெரியுமா?’ என்றார்.**

**சிறுவன் சொன்னான். ‘தெரியுமே! நீங்கள்தான் கடவுளின் மனைவி!!’**

**‘கனிவை வெளிப்படுத்தும் போதெல்லாம் கடவுளாகின்றோம்’**

**சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். அது இதயத்தின் இசை**

**சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். அது சக்தியின் பிறப்பிடம்**

**விளையாட நேரம் ஒதுக்குங்கள். அது இளமையின் இரகசியம்**

**படிக்க நேரம் ஒதுக்குங்கள். அது அறிவின் ஊற்று.**

**நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள். அது மகிழ்ச்சியின் வழி.**

**உழைக்க நேரம் ஒதுக்குங்கள். அது வெற்றியின் விலை.**

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |









| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |


## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்